பக்கங்கள் – 12 | விலை – ரூபா 50
Registered as a Newspaper
# உதயன்
சுடர் : 40 கதிர் : 174
20 மே 2025 செவ்வாய்க்கிழமை
வைகாசி 06 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2056

### தாளையடியிலிருந்து கரவெட்டிக்கு
## கடல்நீரை நன்னீராக்கி பரீட்சார்த்த விநியோகம்!

யாழ்ப்பாணம், மே 20
தாளையடியில் இருந்து கரவெட்டிக்கு கடல்நீரில் இருந்து சுத்திகரிக்கப்பட்ட குடிதண்ணீர் நேற்று திங்கட்கிழமை பரீட்சார்த்தமாக விநியோகிக்கப்பட்டது. 11

# அடுத்தாண்டு மார்ச்சில் மாகாணசபைத் தேர்தல்

### அரசாங்கத்தின் முடிவில் மாற்றமில்லை
### ஆளும் கட்சிக்குள்ளிருந்து தகவல்



கொழும்பு, மே 20
மாகாணசபைத் தேர்தலை விரைவாக நடத்த வேண்டும் என்ற அரசாங்கத்தின் திட்டம் மாறாது. இயலுமான விரைவில் மாகாணசபைத் தேர்தல் நடைபெறும் என்று அரசாங்க வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. 11

## நீர்வேலியில் விபத்து; இளைஞர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், மே 20
யாழ்ப்பாணம் நீர்வேலியில் நேற்று இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். ஊரெழு சுன்னாகம் பகு 09

## நிமோனியாவால் பெண் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், மே 20
யாழ்ப்பாணத்தில் பெண் ஒருவர் நிமோனியாக் காய்ச்சல் காரணமாக கடந்த செவ்வாய்க்கிழமை உயிரிழந்துள்ளார். யாழ். தாவடிப் பகுதியைச் சேர்ந்த சின் 09



## துப்பாக்கி வேட்டுகளால் அதிர்கின்றது கொழும்பு!

### நேற்றும் சூடு; எவருக்கும் பாதிப்பில்லை

கொழும்பு, மே 20
அடுத்தடுத்து இடம்பெறும் தொடர் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்களால் கொழும்பில் பெரும் பதற்றநிலை தோன்றியுள்ளது. கடந்த 3 நாள்களும் வெவ்வேறு இடங் 09

## மாகாணசபைத் தேர்தல் இவ்வருடம் நடக்காது!

### அடித்துக் கூறுகிறார் சீ.வி.கே சிவஞானம்



யாழ்ப்பாணம், மே 20
"மாகாணசபைத் தேர்தல் இந்த வருடம் நிச்சயம் நடைபெறாது. ஏனெனில் அதற்கான நிதி இந்த வருடப் பட்ஜெட்டில் ஒதுக்கப்படவில்லை" இவ்வாறு 11

## பலாலி வீதிகளால் பதறும் பொன்சேகா

விரிவு பக்.03

## மழை , மின்னலால் யாழில் 17 பேர் பாதிப்பு!

யாழ்ப்பாணம். மே 20
மழை மற்றும் மின்னல் தாக்கத்தினால் யாழில் 17 பேர் பாதிக்கப்பட்டுள்ளனரென யாழ்ப்பாண மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித் 09

## முதியவர் ஒருவர் சடலமாக மீட்பு!

யாழ்ப்பாணம், மே 20
உரும்பிராயில் உள்ள வீடொன்றில் இருந்து முதியவர் ஒருவர் உருக்குலைந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். 09

## சுமந்திரனே இப்போது தமிழரசின் செயலாளர்!

யாழ்ப்பாணம், மே 20
"தமிழரசுக் கட்சியின் செயலாளர் சுமந்திரன்தான். அவரே கட்சியின் இன்றையகால அனைத்து செயற்பாடுகளுக்கும் கையொப்பமிடும் அதிகாரம் மிக்கவர்"– இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சீ.வி.கே. சிவஞானம். தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான சி,சிறீதரன் அண்மையில் நேர்காணல் ஒன்றில் 11

## தேவைகருதிய இடமாற்றத்தை திசைதிருப்புகிறதாம் உதயன்!

### நிர்வாக சேவைகள் சங்கத்தினரால் ஆளுநர் அலுவலகத்துக்குக் கடிதம்

யாழ்ப்பாணம், மே 20
உதயனின் கடந்த 16ஆம் திகதிய பதிப்பில் வெளியான, 'பொதுமக்களால் முறைப்பாடு வழங்கப்பட்ட உயரதிகாரிகள் ஏழு பேரின் பதவிகள் பறிக்கப்பட்டன: ஆளுநர் அதிரடி நடவடிக்கை' என்ற செய்தி தவறானது என்று, வடமாகாண இலங்கை நிர்வாக சேவை சங்கத்தின் தலைவர் க.கனகேஸ்வரனால் வடக்குமாகாண ஆளுநர் அலுவலகத்துக்கு கடிதமொன்று அனுப்பப்பட்டுள்ளது. அந்தக் கடிதத்தில் உள்ளதாவது:- 11



'வடக்கு கிழக்கில ஒஞ்சு போட்டுது ஆனால் தெற்கில வேட்டுச்சத்தம் ஒயாது போல"

## பெரும்பான்மைக் கட்சிகளுக்கு ஆட்சியமைக்க இடமளியோம்!

### தமிழ்க்கட்சிகள் ஒன்றிணைய தமிழரசுக் கட்சி அழைப்பு

11

## அசைவ உணவகத்தை மூடு! நல்லூரில் இன்று போராட்டம்



09

**கொவிசெத**

| | |
|---|---|
| திகதி | 19.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4076 |
| ஆங்கில எழுத்து | X |
| வெற்றி இலக்கங்கள் | 08 10 32 43 |
| விசேட எழுத்து | X |

**ஹந்தஹண ராசி சுப பலன்**

| | |
|---|---|
| திகதி | 19.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1143 |
| வெற்றி இலக்கினம் | சிம்மம் |
| வெற்றி இலக்கங்கள் | 01 14 39 40 |

**NLB ஜய**

| | |
|---|---|
| திகதி | 19.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0102 |
| ஆங்கில எழுத்து | E |
| வெற்றி இலக்கங்கள் | 1 2 9 7 |

**மெகா பவர்**

| | |
|---|---|
| திகதி | 19.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2182 |
| ஆங்கில எழுத்து | T |
| சுப்பர் இலக்கம் | 21 |
| வெற்றி இலக்கங்கள் | 20 32 45 54 |

**மஹஜன சம்பத**

| | |
|---|---|
| திகதி | 19.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 5834 |
| ஆங்கில எழுத்து | V |
| வெற்றி இலக்கங்கள் | 9 5 8 5 3 9 |

**தன நிதானய**

| | |
|---|---|
| திகதி | 19.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1864 |
| ஆங்கில எழுத்து | E |
| வெற்றி இலக்கங்கள் | 10 17 56 79 |
| விசேட எழுத்து | E |

**அத சம்பத**

| | |
|---|---|
| திகதி | 19.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0409 |
| ஆங்கில எழுத்து | V |
| வெற்றி இலக்கங்கள் | 8 5 3 9 |

# உள்ளூராட்சிசபைக் கூட்டுக்கு ஐ.தேக. – ஐ.ம.சக்தி இணக்கம்

**கொழும்பு, மே 20**

**உள்ளூராட்சிச்சபைத் தேர்தலில் எதிர்க்கட்சிகள் பெரும்பான்மையைப் பெற்ற உள்ளூராட்சிசபைகளில் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு ஐக்கிய தேசியக் கட்சியும், ஐக்கிய மக்கள் சக்தியும் ஏனைய எதிர்க்கட்சிகளுடன் கூட்டணி அமைப்பதற்கு இணக்கம் கண்டுள்ளன.**

ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சிகளுக்கு இடையே எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்றுத் திங்கட்கிழமை நடைபெற்ற விசேட கலந்துரையாடலில் இந்த இணக்கம் காணப்பட்டது.

ஐக்கிய தேசியக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தி அதன் பொதுச்செயலாளர் தலதா அத்துகோரல, கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்த்தன, சாகல ரத்நாயக்க, ருவான் விஜேவர்தன ஆகியோர் கலந்துகொண்டனர். எட்டப்பட்ட இணக்கப்பாடு தொடர்பான கூட்டு அறிக்கையில் ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரஞ்சித் மண்டும பண்டார மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் தலதா அத்துகோரல ஆகியோர் கையெழுத்திட்டுள்ளனர். (எ-இ)

**சுபிரி தன சம்பத**

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 19.05.2025 | திங்கட்க்கிழமை | X | 7 0 1 8 1 1 | 0542 |

**Super Ball**

| திகதி | தினம் | சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|---|
| 19.05.2025 | திங்கட்க்கிழமை | 2808 | S | 19 21 35 67 |

**சனிதா**

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 19.05.2025 | திங்கட்க்கிழமை | W | 25 31 61 78 | 4969 |

**லக்ன ராசி**

| திகதி | தினம் | மீனம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
|---|---|---|---|---|
| 19.05.2025 | திங்கட்க்கிழமை | | 14 27 45 55 | 4520 |

**KAPRUKA**

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|---|
| 19.05.2025 | திங்கட்க்கிழமை | B | 15 | 32 52 54 69 | 1984 |

**அத கோடிபதி**

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 19.05.2025 | திங்கட்க்கிழமை | X | 20 31 35 36 | 2634 |

**JAYODA**

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 19.05.2025 | திங்கட்க்கிழமை | R | 29 40 65 67 | 2127 |

## சாமர சம்பத்துக்குப் பிணை



அரச நிதியை துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் இலஞ்சம் மற்றும் ஊழல் சாத்துதல்களைப் புலனாய்வு செய்யும் ஆணைக்குழுவால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தசநாயக்கவுக்குப் பிணை வழங்கப்பட்டுள்ளது. ஒரு மில்லியன் ரூபா முறைகேடு தொடர்பாகத் தாக்கல்செய்யப்பட்ட இந்த வழக்கில், பதுளை நீதவான் நீதிமன்றம் நாடாளுமன்ற உறுப்பினரைத் தலா ஒரு மில்லியன் ரூபா மதிப்புள்ள இரண்டு சரீரப் பிணைகளில் விடுவித்தது.

நாடாளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தசநாயக்க, கடந்த மார்ச் மாதம் 27 ஆம் திகதி இராஜாங்க அமைச்சராக இருந்த காலத்தில் சுமத்தப்பட்ட 3 தனித்தனி ஊழல் குற்றச்சாட்டுகளின் பேரில், இலஞ்சம் மற்றும் ஊழல் சாத்துதல்களைப் புலனாய்வு செய்யும் ஆணைக்குழுவால் கைது செய்யப்பட்டார். இரண்டு ஊழல் குற்றச்சாட்டுகளுக்காக அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டார். அதேநேரத்தில் ஒரு ஊழல் குற்றச்சாட்டுக்கு அவருக்கு பிணை வழங்கப்பட்டது. ஒரு குற்றச்சாட்டு, மாகாணசபையின் நிலையான வைப்புத்தொகையிலிருந்து ஒரு அரச வங்கியில் ஒரு மில்லியன் ரூபாவை முறைகேடாகப் பயன்படுத்தினார் என்று கூறப்பட்டது. இரண்டாவது குற்றச் சாட்டு, அரசு வங்கியில் வைத்திருந்த நிலையான வைப்புத்தொகையை திரும்பப் பெற்றதன் மூலம் அரசுக்கு 23 மில்லியன் ரூபா இழப்பை ஏற்படுத்தினார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

# பெரமுன முன்னாள் எம்.பி. கைது

கொழும்பு, மே 20

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் முன்னாள் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் மிலன் ஜயதிலக்க நேற்று இலஞ்சம், ஊழல் விசாரணை ஆணைக்குழுவால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பூகொடப் பிரதேசசபையின் தலைவராக இருந்த காலத்தில் சட்டவிரோத நிலப் பரிவர்த்தனைக்கு அனுமதியளித்த குற்றச்சாட்டில் அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். (எ-இ)



# உயிர் அச்சுறுத்தலால் செமகே பதவி விலகல்

கொழும்பு, மே 20

உயிர் அச்சுறுத்தல் காரணமாக தேசிய மருந்து ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை பிரதம நிறைவேற்று அதிகாரி விசேட மருத்துவ நிபுணர் செமகே தனது பதவியிலிருந்து விலகியுள்ளார்.

கடந்த 9 ஆம் திகதி இரவு 11.30 மணி முதல் நள்ளிரவு வரை சுமார் அரை மணி நேரம் இரண்டு ஆண்கள் வீட்டை உடைத்து சுற்றித்திரிந்த காட்சி அவரது வீட்டில் உள்ள கண்காணிப்புக் கமராவில் பதிவாகியுள்ளது. மருத்துவர் செமேகேயின் படுக்கையறைக்குள் அவர்கள் எட்டிப் பார்த்தமையும் அதில் பதிவாகியுள்ளது. அந்தநேரம் அவரது மனைவியும் குழந்தைகளும் வீட்டில் தூங்கிக்கொண்டிருந்துள்ளனர்.

இவர் தேசிய மருந்து ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை பிரதம நிறைவேற்று அதிகாரியாக பதவிவகித்த வேளையில் முன்னாள் அமைச்சர் கெஹெலிய தாம்புக்கவெலவுடன் தரமற்ற மருந்துகள் இறக்குமதி காரணமாக ஏற்பட்ட முரண்பாட்டையடுத்து தனது பதவியிலிருந்து விலகியுள்ளார். மருந்து இறக்குமதியின்போது மருந்து இறக்குமதி செய்யும் நிறுவனங்களுடன் கேள்விப் பத்திரம் கோரலில் இறுக்கமான நடைமுறைகளைக் கடைப்பிடித்ததால் செமகே சமூக ஊடகங்களில் உள்நோக்கத்துடன் கடுமையாக விமர்சிக்கப்பட்டிருந்தார்.

கடந்த சில வாரங்களாக மருந்து உற்பத்தி நிறுவனங்களுக்கும், தேசிய மருந்து ஒழுங்குபடுத்தல் அதிகாரசபைக்குமிடையே முறுகல் நிலையொன்று உருவாகியுள்ளது. இதன் காரணமாக பதவியில் இருந்து அப்புறப்படுத்தும் நோக்குடனே இந்த அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருக்கலாம் எனக் கருதுகின்றேன் என்று அவர் தெரிவித்துள்ளார். (எ-33-6)

# துப்பாக்கியுடன் இருவர் கைது

கொழும்பு, மே 20

வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியை காரில் மறைத்துவைத்திருந்த குற்றச்சாட்டில் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மாத்தளை, யடவத்தப் பிரதேசத்தில் பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையில் சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். 9 மில்லிமீற்றர் ரக கைத்துப்பாக்கி கைப்பற்றப்பட்டுள்ளது. சந்தேகநபர்கள் நாரம்மல மற்றும் குருணாகல் பகுதியைச் சேர்ந்த 39 மற்றும் 44 வயதுடையவர்கள் என்று தெரிவித்துள்ள யடவத்தப் பொலிஸார், சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் தெரிவித்தனர். (எ-இ)

# பலாலி வீதிகள் திறக்கப்பட்டமை பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாம்

## பதறுகின்றார் பொன்சேகா

**கொழும்பு, மே 20**

**பலாலி பாதுகாப்பு வலயத்திலுள்ள வீதிகள் திறக்கப்பட்டதை ஒருபோதும் அனுமதிக்கமுடியாது. இவ்வாறான நடவடிக்கை பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையக்கூடும் என்று முன்னாள் இராணுவத்தளபதி பீல்ட்மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.**

தனியார் தொலைக்காட்சியொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது- இலங்கையில் மீண்டும் போர் ஏற்படாது என்பதை எந்த வகையில் ஊகிக்கமுடியும். கனடாவில் தற்போது இனப்படுகொலை நினைவகம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. ஐரோப்பா மற்றும் மேற்குலக நாடுகளில் வாழும் டயஸ்போராக்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற உதவியால்தான் புலிகள் அமைப்பு வளர்ச்சிகண்டது. ஆனையிறவு மற்றும் பலாலி பாதுகாப்பு வலயங்களில் இருந்த முகாம்கள் நீக்கப்பட்டமை ஏற்புடையது அல்ல. 10 தற்கொலைக் குண்டுதாரிகளை யாழில் உருவாக்குவது கனடாவில் உள்ள செல்வந்தர்களுக்கு பெரிய விடயமாக அமையாது. குதிரை ஓடிய பின்னர் கடிவாளம் பூட்டிப் பயன் இல்லை. ஒரு இலட்சத்து 50 ஆயிரம் வரையிலான இராணுவம் உள்ளது. அந்த எண்ணிக்கை குறைக்கப்படக்கூடாது- என்றார். (எ-44)

# மொட்டு – ஐ.ம.சக்தி கூட்டணி அமையாது

*அஜித் பி பெரேரா திட்டவட்டம்*

கொழும்பு,மே 20

ஐக்கிய மக்கள் சக்திக்கும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கும் இடையில் அரசியல் ரீதியிலான கூட்டணி ஏற்படுத்தப்படமாட்டாது என்று நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா தெரிவித்தார். உள்ளூராட்சிசபைகளில் எதிரணிகளின் கை ஓங்கியுள்ளது. எனவே, குட்டிச் சபைகளில் ஆட்சியை நிறுவுவதற்குரிய ஒத்துழைப்பு பற்றியே பேச்சு நடத்தப்படுகின்றது.

இது பிரதேச ரீதியிலான இணக்கம். மாறாக தேசிய ரீதியில் கொள்கை ரீதியிலான அரசியல் கூட்டுக் கிடையாது என்று அவர் தெரிவித்துள்ளார். (எ-25, 44)



# 23ஆம் திகதி நாட்டுக்குவரும் இந்திய உப்பு

கொழும்பு, மே 20

இந்தியாவில் இருந்து இறக்குமதிசெய்யப்படும் 2 ஆயிரத்து 800 மெற்றிக்தொன் உப்பு எதிர்வரும் 23ஆம் திகதி நாட்டை வந்தடையும் என தேசிய உப்பு நிறுவனம் தெரிவித்துள்ளது.

அமைச்சரவையின் ஒப்புதலுடன், தேசிய உப்பு நிறுவனம் இந்தியாவிலிருந்து உப்பை இறக்குமதி செய்துள்ளது. அதில் 2 ஆயிரத்து 800 மெற்றிக்தொன் உப்பு முதலில் கொண்டுவரப்படும் என்று தேசிய உப்பு நிறுவனத்தின் பொது முகாமையாளர் துவான் மன்சில் தெரிவித்தார். இறக்குமதி செய்யப்படும் அயடின் கலக்காத உப்பு நாட்டை வந்தடைந்ததும், அது அயடின் கலக்கப்பட்டு 27 மற்றும் 28 ஆம் திகதிகளில் சந்தைக்கு விடப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-33)

# மாணவி மரணம்; அறிக்கையிட நீதிமன்று உத்தரவு

கொழும்பு, மே 20

கொழும்பில் உள்ள பிரபல பாடசலை ஒன்றில் கல்விகற்ற 16 வயதான பாடசாலைமாணவி அம்சி, உயிர்மாய்த்துக்கொண்ட சம்பவம் தொடர்பாக தொடர்ந்து முழுமையான விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்கவேண்டும் என்று கொழும்பு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. அடுத்த மாதம் 23 ஆம் திகதி அடுத்த கட்ட விசாரணை நடபெறும் என்றும் மேலதிக நீதிபதி பசன் அமரசேன கட்டளையிட்டார்.

அதேவேளை, மாணவியின் மரணத்துக்கு நீதி கோரி நீதிமன்றம் முன்பாக அமைதிப் போராட்டம் ஒன்றும் நேற்றுக்காலை நடைபெற்றது. (எ-இ)



# தெஹிவளையில் துப்பாக்கிச்சூடு

கொழும்பு, மே 20

தெஹிவளை, நெடிமல பிரதேசத்தில் கடையொன்றின் மீது நேற்றுத் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் துப்பாக்கிச் சூட்டை நடத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர். இந்தச்சம்பவத்தில் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ-இ)



# தேர்தலில் இறைக்கப்பட்ட போதை வியாபாரப் பணம்!

## விசாரணைகள் ஆரம்பம்

கொழும்பு, மே 20

நடைபெற்றுமுடிந்த உள்ளூராட்சித் தேர்தலில் போதைப்பொருள் கும்பல்கள் வேட்பாளர்களுக்கு பணத்தை வாரி இறைத்தமை தெரியவந்துள்ளது என்று ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்தப் போக்கு மிகவும் ஆபத்தானது என்றும் இது தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளார். (எ-33-6)




கலிகாலத்தில கோயிலில இருக்கிற கடவுள் மாருக்குக்கூட பாதுகாப்பில்லாமல் போட்டுது. கோயில் உண்டியல் உடைக்கிறதும் நகையை எடுக்கிறதுமா கடவுளிட்டையே களவெடுக்கிற துணிவு எங்கட ஆக்களுக்கு வந்திட்டுது. கோயிலில இருக்கிற கடவுளுக்கே இந்த நிலைமையெண்டால், ஆஸ்பத்திரியளில இருக்கிற டாக்குத்தர்மாரின்ர நிலைமையை ஒருக்கா யோசிச்சுப் பாருங்கோ. வருத்தக் காரருக்குக் கண்கண்ட தெய்வங்களா இருக்கிறது உந்த டாக்குத்தர்மார்தானே. அப்பிடிப்பட்டவைக்கே இப்ப ஆஸ்பத்திரியளில பாதுகாப்பில்லாமல் போட்டுது. அதைவிட அவை தங்கட பொருள், பண்டங்களைப் பத்திரமா வைச்சிட்டுப் போனாலும் அது இருக்குமோ, இல்லையோ எண்ட நெஞ்சிடியோடதான் வருத்தக்காரரைப் பாக்கப் போகோணும்.

இப்பிடித்தான் கிட்டடியில யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில டாக்குத்தர் ஒருத்தர் தன்ர ரூமில நாலு லட்சம் ரூபா காசை வைச்சிட்டு, வருத்தக்காரரைச் சோதிக்கப்போட்டார். வந்து பார்த்தால், காசைக் காணேலை. பதறியடிச்சுக் கொண்டு பொலிஸில போய் முறைப்பாடு செய்ய, பொலிஸ் வந்து சிசிரிவிக் கமெராவில ரெக்கோர்ட் பண்ணின காட்சியளைப் பார்த்தால், அங்க வேலை செய்யிற அட்டெண்டர் ஒராள் தான் அந்தக் காசை எடுத்தவர் எண்டது தெரியவந்தது. ஏற்கனவே முதலும் ஒரு களவுக்கேஸில அந்த அட்டெண்டர் பிடிபட்டவர். அப்பிடியிருந்தும் பாவம் எண்டு அவரை வேலையால நிப்பாட்டாமல் விட்டவை. அதுக்குப் பிறகும் ஆள் திருந்தாமல் டாக்குத்தரின்ர நாலு லட்சத்தை ஆட்டையைப் போட்டிருக்கிறார். சிசிரிவி வீடியோவை அடிப்படையா வைச்சு சந்தேகநபரைப் பொலிஸ் பிடிச்சு வழக்கும் போட்டுட்டுது. அந்த வழக்கு விசாரணைக்கு வரேக்கதான் பெரிய ருவிஸ்ட்.

'நான் களவெடுக்கவேயில்லை' எண்டு அந்த அட்டெண்டர் நீதிமன்றத்தில சத்தியம் செய்யாத குறையா அடம்பிடிச்சிருக்கிறார். ஆனால் பொலிஸ் விடேலை. அவர் களவெடுத்ததுக்கு ஆதாரம் இருக்கெண்டு நீதிமன்றத்துக்கு ஆஸ்பத்திரியால குடுக்கப்பட்ட சிசிரிவி வீடியோவை பார்க்கச் சொல்லி இருக்கினம். அந்த வீடியோவில களவெடுக்கிற காட்சியை அழிச்சுப் போட்டு மிச்சத்தைத்தான் குடுத்திருக்கினம் எண்டு தெரியவந்திருக்குது. 'ஏன் அந்தக் குறிப்பிட்ட காட்சி மட்டும் அழிபட்டிருக்கு?' எண்டு ஆஸ்பத்திரிக்காரரைக் கேட்டால், 'அதுக்குப் பொறுப்பான ஒப்பீஸர் தவறுதலா அதை அழிச்சுப்போட்டார்' எண்டு பதில் சொல்லியிருக்கினம். நல்லவேளையா, முதல்தரம் பொலிஸ்காரர் சிசிரிவி வீடியோவைப் பாக்கேக்க, காசைப் பறிகுடுத்த டாக்குத்தர் தன்ர போனிலையும் அதை ரெக்கோர்ட் பண்ணி வைச்சிருந்தவர். இனி அதைத்தான் நீதிமன்றத்தில காட்டி களவை எண்பிக்கவேணும். டாக்குத்தர்மாருக்கே இப்பிடியெண்டால் சாதாரண சனம் எப்பிடி இனி களவுப்பயம் இல்லாமல் ஆஸ்பத்திரியளுக்குப் போவினம்?

padsi@uthayan.com - பட்சி



## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** வரவும் செலவும் அடுத்தடுத்து வந்தாலும் சமாளித்துவிடுவீர்கள். தந்தையின் தேவைகளைப் பூர்த்திசெய்வீர்கள். குடும்பப் பெரியவர்களுடன் கலந்து பேசி முக்கிய முடிவு எடுப்பீர்கள். மாலையில் பள்ளி, கல்லூரிக் கால நண்பர்களைச் சந்தித்து மகிழ்வீர்கள்.

**இடபம்:** சிலருக்குக் குடும்பத்துடன் குல தெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும். குடும்பம் தொடர்பான முக்கிய முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும். வியாபாரத்தில் சக வியாபாரிகளுடன் மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்பு உள்ளதால் பொறுமை அவசியம். ஆஞ்சநேயர் வழிபாடு நன்மைதரும்.

**மிதுனம்:** இன்று புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். மற்றவர்களுடன் வீண்மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால், பேசும்போது பொறுமை அவசியம். எதிர்பார்த்த காரியம் முடிவதில் தாமதம் ஏற்படக்கூடும். சகோதரர்களால் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும்.

**கடகம்:** எதிர்பாராத செலவுகள் அதிகரித்தாலும் சமாளிக்கத் தேவையான பணம் கிடைத்துவிடும். உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்காக செலவு செய்யவேண்டிவரும். ஆனாலும், உற்சாகத்துக்குக் குறைவிருக்காது. பிள்ளைகள் கேட்டதை வாங்கிக் கொடுப்பீர்கள்.

**சிம்மம்:** காரியங்கள் அனுகூலமாகும். சகோதரர்கள்வழியில் செலவுகள் ஏற்பட்டாலும், அதனால் மகிழ்ச்சியே உண்டாகும். உறவினர்களால் வீட்டில் சிறுசிறு பிரச்சினைகள் ஏற்படக்கூடும். பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. தாயிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**கன்னி:** சோர்வு நீங்கி உற்சாகத்துடன் செயற்படுவீர்கள். பிள்ளைகள் பிடிவாதம் பிடித்தாலும், அவர்களை அரவணைத்துச் செல்வது அவசியம். அவர்கள் கேட்டதை வாங்கித் தர முயற்சி செய்யவும். உறவினர்கள்மூலம் சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும் சமாளித்துவிடுவீர்கள்.

**துலாம்:** வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டு. குடும்பத்தில் உங்கள் ஆலோசனைக்கு மிகுந்த முக்கியத்துவம் கிடைக்கும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும் பிள்ளைகளால் சில பிரச்சினைகள் ஏற்படும் என்றாலும் சமாளித்துவிடுவீர்கள்.

**விருச்சிகம்:** எதிர்பார்த்த பணம் கிடைப்பதால், செலவுகளைச் சமாளிப்பதில் சிரமம் எதுவும் இருக்காது. சிலருக்கு தாய்வழி உறவுகளால் ஆதாயம் உண்டாகும். தன்னம்பிக்கையுடன் செயல்படுவீர்கள். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள்.

**தனுசு:** உற்சாகமான நாள். மனஉறுதியுடன் செயற்படுவீர்கள். தந்தைவழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகும். சகோதரர்கள் உங்களுடைய யோசனையை ஏற்றுக் கொள்வார்கள். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**மகரம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். பிள்ளைகளின் அவசியத் தேவைகளுக் காக செலவு செய்யவேண்டிவரும்.சிலருக்கு உறவினர்களால் சில சங்கடங்கள் ஏற்பட்டாலும் பாதிப்பு எதுவும் இருக்காது. உணவு விஷயத்தில் கவனமாக இருக்கவும்.

**கும்பம்:** தெய்வ அனுகூலம் நிறைந்த நாள். பிள்ளைகளால் வீட்டில் உற்சாகமும் கலகலப்புமான சூழ்நிலை காணப்படும். சிலருக்கு தாய்மாமன்வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும். தாயின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வீர்கள்.

**மீனம்:** இன்றைக்கு எதிலும் நிதானமாகச் செயல்படவும். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. சிலருக்கு தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். குடும்பத்தில் வீண்விவாதம் ஏற்படக்கூடும். பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.

# பிளேஓவ் சுற்றிலிருந்து லக்னோ வெளியேற்றம்

### மும்பை, டெல்லிக்கு இடையே போட்டி



**ஐ.பி.எல். தொடரில் நேற்று இரவு நடைபெற்ற ஆட்டத்தில், லக்னோவைத் தோற்கடித்தது ஹைதராபாத். இந்தத் தோல்வியைத் தொடர்ந்து, பிளேஓவ் சுற்றிலிருந்து லக்னோ அணி வெளியேறியுள்ளது.**

முதலில் துடுப்பெடுத்தாடிய லக்னோ அணி 7 விக்கெட்டுக்களை இழந்து 205 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக மிச்செல் மார்ஷ் 65 ஓட்டங்களையும், மார்க்கம் 61 ஓட்டங்களையும், நிக்கொலஸ் பூரன் 45 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் இஷான் மலிங்க 2 விக்கெட்டைக் கைப்பற்றினார்.

பதிலுக்குக் களமிறங்கிய ஹைதராபாத் அணிக்கு, ஆரம்ப வீரரான அபிஷேக் சர்மா 20 பந்துகளில் 59 ஓட்டங்களைக் குவித்துப் பலம் சேர்த்தார். கிளாசன் 47 ஓட்டங்களையும், இஷான் கிஷான் 35 ஓட்டங்களையும் குவிக்க அந்த அணி 18.2 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து வெற்றிபெற்றது.

பிளேஓவ் நிலவரம்

ஹைதராபாத் அணியின் இந்த வெற்றியின் மூலம், லக்னோ அணி பிளேஓவ் வாய்ப்பை முற்றாக இழந்துள்ளது. பிளேஓவ் சுற்றுக்கு குஜராத், பெங்களூர், பஞ்சாப் அணிகள் ஏற்கனவே தகுதிபெற்றுள்ள நிலையில், நான்காவது இடத்துக்கு மும்பை மற்றும் டெல்லி அணிகளுக்கு இடையில் கடும் போட்டி ஏற்பட்டுள்ளது. (ம)

## குறிகாட்டுவான் - நயினாதீவு இடையே புதிய படகுப்பாதை

யாழ்ப்பாணம், மே 20

வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் சுமார் 200 மில்லியன் ரூபா செலவில் குறிகாட்டுவான் மற்றும் நயினாதீவுக்கு இடையே சேவையில் ஈடுபடுத்துவதற்காகப் படகுப்பாதை தயாரிக்கப்பட்டுவருகிறது.

இந்தப் படகுப்பாதைச் சேவையை எதிர்வரும் ஜூலை மாதம் முதல் ஆரம்பிக்க உத்தேசிக்கபட்டுள்ளது. இதன்மூலம் 50 பயணிகளும் 4 வாகனங்களும் சம நேரத்தில் பயணம்செய்யமுடியும் என வீதி அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது. (எ-25,125)

## எகிறும் வரிகள்

அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பிளாஸ்ரிக் பொருள்களுக்கு, 75 வீதம் வரிகளை விதிப்பமாக சீனா அறிவித்துள்ளது. இன்றுமுதல் இந்த வரிகள் நடைமுறைக்கு வரவுள்ளன. (ம)

# வெளியக விசாரணைக்கு உரமூட்டுகின்றதாம் அரசு

### கொதிக்கின்றார் வீரசேகர

கொழும்பு, மே 20

இலங்கைக்கு எதிராக ஜெனிவாவில் முன்னெடுக்கப்பட்டுவரும் வெளியகப் பொறிமுறைக்கு உரமூட்டும்வகையிலேயே அமைச்சர் பிமல் ரத்நாயக்க கருத்து வெளியிட்டுவருகின்றார் என்று முன்னாள் அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜனப் பெரமுனக் கட்சி தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

பட்டலந்தையில் தமது சிங்கள மக்களையே சித்திரவதைக்குட்படுத்தியவர்கள், போர்காலத்தில் தமக்குத் தெரியாத தமிழ் மக்களை எப்படி கவனித்திருப்பார்கள் என அமைச்சர் பிமல் ரத்நாயக்க நாடாளுமன்றத்தில் சந்தேகம் எழுப்பியுள்ளார். போர்க்குற்றம் தொடர்பில் ஜெனிவாவில் முன்னெடுக்கப்பட்டுவரும் வெளியக பொறிமுறைக்கு உரமூட்டும்வகையிலேயே இந்த அறிவிப்பு அமைந்துள்ளது.

நாடாளுமன்றத்தில் வைத்து இப்படி கருத்து வெளியிட்டால் அது ஹென்சாட்டில் இடம்பெறும். பின்னர் அதைச் சாட்சியாக எடுத்துக்கொள்ளக்கூடும். போர் இடம்பெறும் காலப்பகுதியில் பிமல் ரத்நாயக்க எங்கே இருந்தார்? புலிகள் அப்பாவி மக்களை கொலை செய்யும் போது அவர் என்ன செய்தார்? 2 லட்சத்துக்கு 95 ஆயிரத்துக்குமேற்பட்ட மக்களை பாதுகாத்து - மீட்டெடுத்தே நாம் போரை முடிவுக்கு கொண்டுவந்தோம். இது தமிழ் மக்களுக்கு எதிரான போர் அல்ல. புலிகள் அமைப்புக்கு எதிரான போராகும். இலங்கைப் படையினர் போர்க்குற்றங்களில் ஈடுபடவில்லை. சர்வதேச நிபுணர்களும் இதனை குறிப்பிட்டுள்ள னர். நிலைமை இப்படி இருக்கையில் தமிழ் டயஸ்போராக்களுக்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையிலேயே பிமல் ரத்நாயக்க கருத்து வெளியிட்டுவருகின்றார்- என்றார். (எ-இ)

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை



# முல்லைக்கு என்ன பதில்?

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிறைவுக்கு வந்திருக்கின்றது. இறுதிப்போர் தொடர்பிலும், அது ஏற்படுத்திய அழிவுகள் தொடர்பிலும் ஏராளம் ஒளிப்படங்களும், காணொலிகளும், பதிவுகளும் சமூக வலைத்தளங்களில் கொட்டிக் கிடக்கின்றன. எது எப்படியோ, வரலாறு ஏதோவொரு விதத்தில் வருடா வருடம் கடத் தப்பட்டு வருகின்றது நல்லது! ஆனால், இத்தனை அழிவுகளையும் தாங்கிக்கொண்ட முல்லைத்தீவுப் பெருநிலப்பரப்புக்கு நாங்கள் என்ன பதிலைச் சொல்லப்போகின்றோம்?

போர் என்பது ஈழத்தமிழர்களுக்குப் பொதுவானதாக இருந்தாலும், அது ஏற்படுத்திய அழிவை பொதுவான அளவுகோலால் அளந்துவிடமுடியாது. முல்லைத்தீவு எதிர்கொண்ட பேரழிவு கனதியானது. எட்டு மாவட்ட மக்களையும், அவர்களின் துன்பங்களையும், துயரங்களையும், கண்ணீரையும் தன்னகத்தே தாங்கி, தன்னையும் அழித்துக்கொண்டவள்தான் முல்லைத்தாய். இன்றும்கூட முள்ளிவாய்க்கால் படுகொலை நினைவேந்தல் மட்டும்தான் முல்லைத்தீவின் அடையாளமாக எஞ்சி நிற்கின்றது. இது ஏன்? போரை எதிர்கொண்ட பூமியில், அபிவிருத்திப் பணிகள் மிக அவசியமானவை. ஆனால், அவ்வாறான எந்த அம்சங்களும் முல்லைத்தீவில் இல்லை. முல்லைத்தீவில் இன்று மாடி வீடுகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. மக்களின் வாழ்வு சற்று மேம்பட்டிருக்கின்றது. ஆனால், அதுவொன்றும் அரச அபிவிருத்தியாகாது. அவை அனைத்தும், இங்குள்ள மக்களினதும், புலம்பெயர் உறவுகளினதும் தனிப்பட்ட உழைப்பும் தியாகமும்தான். போரின் பின்னர் போடப்பட்ட பட்டுப்பாதை வீதிகளை நீக்கிவிட்டால், 2009ஆம் ஆண்டு மே மாதத்துக்கு முன்னைய உட்கட்டமைப்பு எதுவோ அதுதான் இன்றைய முல்லைத்தீவினதும் நிலை.

முல்லைத்தீவுக்கென தனியான தீயணைப்புத்துறை இல்லை, ரயில் வசதிகள் இல்லை, மேம்பட்ட போக்குவரத்து இல்லை, குளிரூட்டப்பட்ட பேருந்து சேவைகள் இல்லை. 'இல்லை' என்பதைத்தவிர, அங்கு வேறெதுவும் இருப்பதாயில்லை. கிளிநொச்சியிலும் கிட்டத்தட்ட இதே நிலைதான். ஆதலால், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு உள்ளிட்ட போரில் வெந்துபோன பகுதிகளின் அபிவிருத்திக்காக அரசாங்கம், தனியான கொள்கைத் திட்டங்களை வகுக்க வேண்டும். அங்கு பிரத்தியேக கவனம் செலுத்தப்படவேண்டும். அதுவே தமிழ் மக்களின் தற்போதைய எதிர் பார்ப்பாகும். முல்லைத்தீவின் உட்கட்டமைப்பு மேம்பாடு, வெறுமனே அந்தப் பகுதி மக்களுடைய பிரச்சினையல்ல. அத்து ஒட்டுமொத்த தமிழர்களுக்குமான பிரச்சினை. அபிவிருத்தி என்ற பெயரில், இடித்துக் கட்டுவதையும், ஊதிப் பெருப்பிப்பதையும் விடுத்து, முல்லைத்தீவையும் கொஞ்சம் கவனியுங்கள். போர்தின்ற பூமியென்றால், போரின் வடுக்களைச் சுமந்தபடிதான் வாழவேண்டும் என்ற எந்த விதியும் இல்லையே.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

நாளொரு நல்வார்த்தை

உண்மை எப்போதும் சுருக்கமாய் பேசப்படுகிறது;
பொய்தான் விரிவாகப் பேசப்படும்.

– லியோ டால்ஸ்டாய்




## எவருக்கும் அநீதி ஏற்படாதவாறு பயங்கரவாதச் சட்ட மறுசீரமைப்பு



பொன்சேகாவுக்கு ஏற்பட்டது ஞானம்

**கொழும்பு, மே 20**

**பயங்கரவாதத் தடைச்சட்டமானது கடந்தகாலங்களில் அரசியல் பழிவாங்கலுக்காகவும் பயன்படுத்தப்பட்டுள்ளது. அதனால் பாதிக்கப்படும் தரப்புகளுக்கு அநீதி ஏற்படாதவகையில் புதிய சட்ட மறுசீரமைப்பு இடம்பெறவேண்டும் என்று முன்னாள் இராணுவத்தளபதி பீல்ட்மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.**

புலிகள் போன்ற அமைப்புகளை ஒடுக்குவதாக இருந்தால் கடுமையான சட்டங்கள் இருக்கவேண்டும். ஏனெனில் உயிர்த்தியாகம் செய்வதற்குக்கூடத் தயாராக இருப்பவர்களை சாதாரண சட்டம் மூலம் கட்டுப்படுத்தமுடியாது.

போர்க்காலத்தில் பயங்கரவாதச் சட்டம் நடைமுறையில் இருந்தது நியாயமானது. எனினும், அரசியல் பழிவாங்கலுக்காகவும் இந்தச் சட்டம் பயன்படுத்தப்படுகின்றது. இராணுவத் தளபதியாக இருந்த எனக்கு எதிராகக்கூட பயங்கரவாதத் தடைச் சட்டம் பயன்படுத்தப்பட்டது.

பாதிக்கப்படும் தரப்பினருக்கு எவ்விதத்திலும் அநீதி இழைக்காத வகையில் சட்டத்திருத்தம் செய்யப்படவேண்டும். உரிய மாற்று ஏற்பாடுகளுடனேயே சட்டமறுசீரமைப்பு இடம்பெறவேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-33-44)

## டெங்கு ஒழிப்பு வாரம் ஆரம்பம்

கொழும்பு, மே 20

தற்போது டெங்குத் தொற்று அதிகரித்துள்ள நிலையில் நேற்றுமுதல் டெங்கு ஒழிப்பு வாரம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தக் காலப்பகுதியில் வீடுகள், பாடசாலைகள் உள்ளிட்ட அனைத்து சுற்றுப்புறங்களும் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுமென தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு அறிவித்துள்ளது. (எ-இ)





## மின்னல் எச்சரிக்கை

கொழும்பு, மே 20

பல மாகாணங்களில் கடுமையான மின்னல் தாக்கம் காணப்படும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்டங்களில் பல இடங்களில் மழை பெய்யும்போது மின்னல் தாக்கம் காணப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இடியுடன் கூடிய மழை பெய்யும்போது தற்காலிகமாக பலத்த காற்று வீசக்கூடும் என்றும், பொதுமக்கள் அவதானத்துடன் செயற்பட வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (எ-இ)

## இறையடி சேர்ந்தார்

### யோசப் பொன்னையா ஆண்டகை

மட்டக்களப்பு, மே 20

மட்டக்களப்பு மறைமாவட்டத்தின் ஓய்வுநிலை ஆயர் யோசப் பொன்னையா ஆண்டகை நேற்று இறையடி சேர்ந்தார் என்று ஆயர் இல்லம் அறிவித்துள்ளது. இவர் கடந்த இரண்டு வாரங்களுக்கு மேலாக சுகயீனமுற்றிருந்தநிலையில் நேற்று தனது 74 ஆவது வயதில் இறையடி சேர்ந்தார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## விளக்கமறியலில் மஹிந்தானந்த

கொழும்பு, மே 20

முன்னாள் விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேவை எதிர்வரும் 26ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

2021ஆம் ஆண்டில் விவசாய அமைச்சராக மஹிந்தானந்த அளுத்கமகே கடமையாற்றிய போது, தரமற்ற உரத்தை இறக்குமதிசெய்வதற்காக சீன நிறுவனத்திற்குப் பணம் செலுத்தியமை தொடர்பில், அவரை கைதுசெய்து நீதிமன்றத்தில் முற்படுத்துமாறு கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது.

மஹிந்தானந்த அளுத்கமகே நேற்று கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றில் முன்னிலையான நிலையில் அவரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது. (எ-இ)

நாளை

புதன்கிழமை- வைகாசி 07

21.05.2025

சுபநேரம் : 04.22- 05.52

ராகுகாலம் : 11.52 - 01.22



# முழுமைபெறாத உலரவிடும் தளம் சுதந்திரபுரம் விவசாயிகள் விசனம்

**முல்லைத்தீவு, மே 20**

**உடையார்கட்டு கமநலசேவைத் திணைக்களத்தின்கீழ் உள்ள சுதந்திரபுரம் கிராமத்தில் 2020ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட நெல் உலரவிடும் தளத்தின் கட்டுமானம் சரியானமுறையில் முழுமைபெறாததால் விவசாயிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.**

இந்த நெல் உலரவிடும் தளம் 1.3 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்டது. ஒப்பந்தக்காரர்களுக்கு முழு நிதியும் விடுவிக்கப்பட்டுள்ள போதும், உலரவிடும் தளம் சரியான முறையில் செப்பனிடப்பட வில்லை என்று விவசாயிகள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

இந்த உலரவிடும் தளத்தில் நெற் செய்கையாளர்களும், மேட்டுநிலச் செய்கையாளர்களும் தங்கள் உற்பத்திப் பொருள்களை உலரவைக்கின்றனர். நெல், கச்சான், பயறு, உளுந்து போன்றவை இங்கு விவசாயிகளால் உலரவிடப்படுகின்றன.

ஆனால் சரியானமுறையில் இந்த உலரவிடும் தளம் செப்பனிடப்படாமையால் விவசாயிகள் நெருக்கடிகளைச் சந்திக்கவேண்டியுள்ளது என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

அண்மையில் விவசாயி ஒருவர் நிலக்கடலையை உலரவைத்த போது மழை பெய்துள்ளது. தறப்பாள்கொண்டு நிலக்கடலையை மூடியபோதும், உலரவிடும் தளம் வெள்ளத்தில் மூழ்கியது.

அதனால் விவசாயிக்குப் பெரும் நட்டம் ஏற்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றது. வெள்ள நீர் சரியானமுறையில் வழிந்தோடும் வகையில் உலரவிடும் தளம் அமைக்கப்படவில்லை என்று விவசாயிகள் கூறுகின்றனர்.

இது தொடர்பாக சுதந்திரபுரம் கமக்கார அமைப்பின் தலைவர் ஐ.துரைச்சுவாமி வினவியபோது, இந்த உலரவிடும் தளம் அமைக்கப்பட்டு 5 ஆண்டுகள் ஆகியுள்ளன. ஆனால் உலவிடும் தளம் சரியான முறையில் அமைக்கப்பட வில்லை. ஒப்பந்தகாரர்களுக்குப் பல தடவைகள் இது தொடர்பில் தெரியப்படுத்தப்பட்டுள்ளது என்று தெரிவித்தார். (எ-33-19)

# வீதி, பாலத்தைச் சீரமைக்குமாறு கண்டாவளையில் ஆர்ப்பாட்டம்

கிளிநொச்சி, மே 20

கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கல்மடுநகர் கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட ரங்கன் குடியிருப்புப் பகுதி மக்கள் தங்கள் கிராமத்தின் வீதி மற்றும் பாலத்தைச் சீரமைத்துத் தரவேண்டும் என்று நேற்றுக் கண்டாவளைப் பிரதேச செயலகத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் மேற்கொண்டனர். 2021ஆம் ஆண்டு கிராமத்தில் உள்ள சிறிய பாலம் அகற்றப்பட்டு, புதிதாகப் பெரிய பாலம் ஒன்று கட்டப்படும் என்று கூறப்பட்டதுடன், அடிக்கல்லும் நடப்பட்டது. ஆனால் இன்றுவரை எதுவும் நடக்கவில்லை. அந்த வீதியும் தற்போது கால்வாயாக மாறியுள்ளது.

இதனால் மக்கள் தங்கள் அன்றாட நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு பல மைல் தூரம் சுற்றிச் செல்லவேண்டியுள்ளது. பாடசாலை மாணவர்கள், விவசாயிகள், வயோதிபர்கள் என அனைவரும் பல மைல் தூரம் சுற்றியே நாளாந்தக் கடமைகளை முன்னெடுக்க வேண்டியுள்ளது.

இதற்கு மாற்றாகப் பயன்படுத்தப்படும் பாதை தனியார் ஒருவரின் காணியை ஊடறுத்துச் செல்கின்றது. தற்போது அந்தக் காணி உரிமையாளர் பாதையைப் பாவிக்க அனுமதிக்கமுடியாது என்று கூறுகின்றார். அதனால் அந்தப் பகுதியில் வாழும் 96 குடும்பங்களுக்கும் அதிகமானவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தெரிவித்தனர்.

கிராம மக்களுடன் கலந்துரையாடிய கண்டாவளை பிரதேச செயலர், அந்த வீதி தொடர்பாக வீதி அபிவிருத்தி அதிகாரசபையினருக்கு ஏற்கனவே தெரியப்படுத்தப்பட்டுள்ளது. இன்று (நேற்று) மக்கள் நடத்திய போராட்டம் தொடர்பாகவும் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. தற்போது பயன்பாட்டில் உள்ள மாற்றுப் பாதையை மக்கள் பாவனைக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களுடன் கலந்துரையாடி நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று தெரிவித்துள்ளார். (எ-113)

# அலங்கார உற்சவம்

யாழ்ப்பாணம், மே20

புன்னாலைக்கட்டுவன் வடக்கு பூரண புஸ்கலை சமேத ஹரிகரபுத்திர (ஐயனார்) ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த சனிக்கிழமை ஆரம்பமாகியது.

தொடர்ந்தும் 11 தினங்கள் நடைபெறவுள்ள அலங்கார உற்சவத்தில் தினமும் மாலை 5.30 மணியளவில் அபிஷேகம், விசேட பூசை, சுவாமி வீதியுலாவரும் திருக்காட்சி என்பன இடம்பெறவுள்ளன.

மகா கும்பாபிஷேக நாளான எதிர்வரும் 28ஆம் திகதி புதன்கிழமை காலை 7 மணியளவில் சங்காபிஷேகமும் மதியம் மகேஸ்வரப் பூசையும் நடைபெறும்.

அன்றையதினம் மாலை 5மணியளவில் திருக்கல்யாணம், திருவூஞ்சல் இடம்பெற்று அதனைத் தொடர்ந்து சுவாமி வீதியுலாவரும் திருக்காட்சி இடம்பெறும்.

மறுநாள் 29ஆம் திகதி வியாழக்கிழமை வைரவர் பொங்கல் இடம்பெறுமென தேவஸ்தானத்தினர் தெரிவித்துள்ளனர். (ச-41-66)

# "ஈழத்துத் தமிழ் மரபுக் கவிதை" இரு நூல்கள் வெளியீடு இன்று

யாழ்ப்பாணம், மே 20

வட மாகாணக் கல்வி அமைச்சின் பண்பாட்டலுவல்கள் அலகின் ஏற்பாட்டில், "வெடியரசன்தென்மோடி நாட்டுக்கூத்து,' "ஈழத்துத் தமிழ் மரபுக்கவிதைக் களஞ்சியம்" ஆகிய இரு நூல்களின் வெளியீடு கல்வி அமைச்சின் மாநாட்டு மண்டபத்தில், இன்று செவ்வாய்க்கிழமை பி.ப. 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

வட மாகாண பண்பாட்டலுவல்கள் பிரதிப்பணிப்பாளர் சு.சுபாஸ்கரன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் ம.பற்றிக்டிறஞ்சன் கலந்துகொள்வார் என்றும், கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் வேல் நந்தகுமார் நூல் வெளியீட்டுரையை நிகழ்த்துவார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-25)

## முரசுமோட்டையில் குருதிக்கொடை



முல்லைத்தீவு, மே 20

முள்ளிவாய்க்கால்நினைவுநாளை முன்னிட்டு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முரசுமோட்டை வட்டாரத்தின் ஏற்பாட்டில் இரத்ததான முகாம் முரசுமோட்டை முருகானந்தாக் கல்லூரி முன்றலில் நடைபெற்றது. வட்டார தமிழரசுக்கட்சி இளைஞர் அணிச் செயற்பாட்டாளர் அ.பமீகரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் தமிழரசுக் கட்சி சார்பாக குறித்த வட்டாரத்தில் தெரிவுசெய்யப்பட்ட பரமலிங்கம் பாஸ்கரன் கலந்துகொண்டு இரத்ததான நிகழ்வை ஆரம்பித்துவைத்தார். இதன்போது கட்சி ஆதரவாளர்கள், பொதுமக்கள் எனப்பலர் கலந்துகொண்டனர். (ச-33-113)

# காரைநகர்- ஊர்காவற்றுறைப் பாலம் திட்டத்தின் முன்மொழிவு சமர்ப்பிப்பு

யாழ்ப்பாணம்,மே 20

காரைநகர்-ஊர்காவற்றுறை இடையே பாலம் அமைப்பதற்கான திட்ட முன்மொழிவு, வடக்கு மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையால், தலைமை அலுவலகத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

காரைநகருக்கும், யாழ்ப்பாணத்துக்கும் இடையில் படகு சேவை மற்றும் படகுப்பாதை சேவை மாத்திரமே இதுவரை காலமும் இயங்கிவருகின்றன . படகுப்பாதை வீதி அபிவிருத்தி அதிகாரசபையாலும் படகுச்சேவை தனியாராலும் முன்னெடுக்கப்படுகின்றது. இந்த நிலையில் 400 மீற்றர் நீளமான பாலம் ஒன்றை அமைப்பதற்கு வீதி அபிவிருத்தி அதிகாரசபை திட்டமுன்மொழிவு ஒன்றை சமர்ப்பித்துள்ளது.

எதிர்காலத்தில் இந்த முன்மொழிவு செயற்படுத்தப்படும் பட்சத்தில் தீவக மக்களின் போக்குவரத்து இலகுபடுத்தப்படும் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. (எ-25,125)

# தமிழர் பிரதேசங்களின் அதிகாரத்தை ஆளுங்கட்சிக்கு விட்டுக்கொடோம்

## சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவிப்பு

**கொழும்பு,மே 20**

**வடக்கு - கிழக்கு மாகாணங்களில், குறிப்பாக தமிழ்ப் பிரதேசங்களில் ஆட்சி அதிகாரங்கள் என்பது தமிழ் மக்களின் கைகளில் இருக்கவேண்டும், தமிழ்த்தேசியத்தை அங்கீகரிப்பவர்களது கைகளில் இருக்கவேண்டும். எதிர்காலத்தில் தமிழ் மக்களினுடைய சிறப்பான உரிமைகளைப் பெற்றுக்கொள்ளக்கூடிய ஒரு கூட்டை நிறுவுவதற்கான ஓர் அடித்தளமாக இது அமையவேண்டும்.**

இவ்வாறு ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் முக்கியஸ்தர் சுரேஷ் பிரேமச்சந்திரன், அவரது இல்லத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இப்போது இருக்கக்கூடிய ஆளும் தரப்பு, உள்ளூராட்சிசபைகளை கைப்பற்றுவதைத் தவிர்த்து, தமிழ்த் தேசியப் பரப்பில் இருக்கக் கூடியவர்கள் அதிகாரங்களை பெற்றுக்கொள்ளவேண்டும் என்ற முயற்சியில்தான் நாங்கள் ஈடுபடுகின்றோம். பல இடங்களில் தமிழரசுக் கட்சி முன்னிலை வகித்தாலும் அறுதிப்பெரும்பான்மை என்ற விடயங்கள் பெரும்பாலான இடங்களில் இல்லை. நான்கு சபைகளில் தவிசாளர் அதிகாரங்களை எமக்குத் தருமாறு நாங்கள் கோரியிருக்கின்றோம். அதுபற்றி அவர்கள் ஆராய்ந்து கூறுவதாகக் கூறியிருக்கின்றார்கள்.

ஆகவே எதிர்காலத்தில் தமிழ் மக்களினுடைய சிறப்பான உரிமைகளைப் பெற்றுக்கொள்ளக்கூடிய ஒரு கூட்டை நிறுவுவதற்கான அடித்தளத்தை நாம் நிறுவவேண்டும் - என்றார். (ச-27)



# நிலக்கடலை அறுவடை பருவமழையால் பாதிப்பு

யாழ்ப்பாணம், மே 20

தற்போது பெய்துவரும் பருவமழை காரணமாக முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்புப் பிரதேசத்துக்குட்பட்ட சுதந்திரபுரம் பகுதியில் பயிரிடப்பட்ட நிலக்கடலைச் செய்கை பாதிக்கப்பட்டுள்ளதாக நிலக்கடலைச் செய்கையாளர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

குறித்த பகுதியில் சுமார் 400 ஏக்கர் வரையில் நிலக்கடலை பயிரிடப்பட்டது.

தற்போது நிலக்கடலை அறுவடை இடம்பெற்று வருகின்றது. அறுவடைசெய்யப்பட்ட நிலக்கடலையை காயவைத்து பிரித்து எடுப்பதற்காக காத்திருந்த

வேளை கடந்த வெள்ளிக்கிழமை இரவு பெய்த கடும் மழையால் அவை முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

கடந்த பெப்ரவரி மாதமும் நிலக்கடலை விதைப்பை மேற்கொண்டபோதும் அப்போது பெய்த பருவ மழையினால் அழிவை எதிர்கொண்டோம் என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். (ச-19)





திருகோணமலை தம்பலகாமம் கள்ளிமேட்டுப் பகுதியில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை முள்ளிவாய்க்கால் நினைவுக்கஞ்சி வழங்கிவைக்கப்பட்டது. குறித்த நினைவேந்தல் நிகழ்வை அப்பகுதி இளைஞர்கள், பொதுமக்கள் இணைந்து ஏற்பாடு செய்திருந்தனர். (ச)

# மட்டக்களப்பு கல்லடியில் மிதந்துவந்த தூபி

மட்டக்களப்பு,மே 20

மட்டக்களப்பு கல்லடிப் பாலத்து வாவியில் இன அழிப்பு வாரத்தை நினைவுகூர்ந்து அமைக்கப்பட்ட இரண்டு தூபிகள் கடந்த வெள்ளிக்கிழமை மிதந்து வந்துள்ளன. மின் விளக்குகள் அலங்கரிக்கப்பட்டு இன அழிப்பின் அடையாளமான முள்ளிவாய்க்கால் தூபியைக் கொண்ட புகைப்படங்கள் மற்றும் கறுப்பு, சிவப்பு, மஞ்சள் கொடிகள் ஏற்றப்பட்டு மிதக்கும் வகையில் அமைக்கப்பட்ட இரண்டு மிதக்கும் தூபிகளே இவ்வாறு கல்லடிப் பாலத்து வாவியில் மிதந்துவந்துள்ளன. அதனையடுத்து அங்கு வந்த பொலிஸார் அதனை மீட்பதற்கான நடவடிக்கையை முன்னெடுத்தனர். (ச-இ)





# சஞ்சிகை வெளியீடு

முல்லைத்தீவு, மே 20

முள்ளிவாய்க்கால் பேரவலத்தின் பதிவுகளைத் தாங்கிய, 'நித்தம்' மாதசஞ்சிகையின் மே மாத இதழ் முல்லைத்தீவு முல்லைக் கல்வி நிலையத்தில் வெளியீடுசெய்துவைக்கப்பட்டது.

நிகழ்வில் சஞ்சிகையின் முதற்பிரதியை சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் நாராயணமூர்த்தி நகுலேஸ்வரன், பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனிடம் கையளித்தார்.

தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனால் கல்விநிலைய மாணவர்கள், ஆசிரியர்களிடம் சஞ்சிகையின் ஏனைய பிரதிகள் கையளிக்கப்பட்டன. (ச-41)



# கொடியேற்றம்

யாழ்ப்பாணம், மே 20

வரலாற்றுச் சிறப்புமிக்க யாழ். வடமராட்சி கிழக்கு, செம்பியன்பற்று வடக்கு புனித பிலிப்பு நேரியார் ஆலயக் கொடியேற்றம் கடந்த சனிக்கிழமை ஆலய முன்றலில் இடம்பெற்றது. ஆலயப் பங்குத்தந்தையான அருட்தந்தை ஜஸ்டின் ஆதர் தலைமையில், திருச்செபமாலையுடன் ஆரம்பமாகி அருட்தந்தை அமிர்தராஜால் திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்பட்டது

. நிகழ்வில் ஆலயப் பங்குத்தந்தை, பங்குமக்கள், அருட்சகோதரிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ச-27)

# வவுனியா மேல்நீதிமன்றத்தால் போதைப்பொருள்கள் அழிப்பு!



வவுனியா, மே 20

வவுனியா மேல் நீதிமன்றத்தில் சான்றுக் பொருள்களாக ஒப்படைக்கப்பட்ட போதைப்பொருள்கள் மேல் நீதிமன்ற நீதிபதி எம்.எம்.மிஹால் முன்னிலையில் நேற்று அழிக்கப்பட்டன.

வவுனியா, மடுகந்த காட்டுப் பகுதியில் வைத்து அவை அழிக்கப்பட்டன. அழிக்கப்பட்ட சான்றுப் பொருள்கள் ஐம்பதிற்கும் மேற்பட்ட வழக்குகளுடன் தொடர்புடையவை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-110)

# முட்டை விலையில் சரிவு

கொழும்பு, மே 20

கடந்த சில வாரங்களுடன் ஒப்பீடுகையில் உள்ளூர்ச் சந்தையில் முட்டை விலையில் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது என்று நுகர்வோர் தெரிவிக்கின்றனர். நாட்டில் பல பகுதிகளில் முட்டை ஒன்று 20 முதல் 24 ரூபாவரை விற்பனை செய்யப்படுகிறது. தமிழ் சிங்கள புத்தாண்டு காலத்தில் முட்டை விலை 26 முதல் 28 ரூபாவாகக் காணப்பட்டது. (எ-இ)

**அகில இலங்கை டீ.ஏ.ம் பட்டதாரிகள் வைத்திய சங்கம்**
**பொதுக்கூட்டம் 2025**

**காலம் : 01.06.2025 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணி**
**இடம் : இலங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி வளாகம்**
**நிகழ்வுகள் :**

1. இறைவணக்கம்
2. தலைமையுரை
3. செயலாளர் அறிக்கை
4. பொருளாளர் கணக்கு அறிக்கை
5. யாப்பு விதிகள் சமர்ப்பித்தல்
6. கல்லூரி நூற்றாண்டு விழாவில் எமது சங்கத்தின் பங்களிப்பு தொடர்பான ஆராய்வு
7. புதிய அங்கத்தவர்களை இணைத்துக்கொள்வதுடன் முக்கியமாக வைத்தியப்பட்டத்தை பெறவுள்ளவர்களும் (கல்லூரியில் படித்தவர்கள்) அங்கத்துவம் பெற்றுக்கொள்ளலாம்
8. நன்றியுரை

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**

Dr.ப.சத்தியநாதன் J.P
தலைவர்

Dr.வே.கணேசவேல் J.P
செயலாளர்

(CS 58309) E-1

**31ம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பிதழும்**

தோற்றம்
18 . 04 . 1948



மறைவு
20 . 04 . 2025

கடந்த (20.04.2025) ஞாயிற்றுக்கிழமை அன்று
சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி

**அமரர் சுந்தரமூர்த்தி சாலினி**

**அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் கடந்த (18.05.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. அன்னாரது வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (20.05.2025) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.**

இல.50 அரசடி வீதி
யாழ்ப்பாணம்

குடும்பத்தினர்.
075 046 8921

(CS 30121) D*

## மரண அறிவித்தல்

மண்ணில்
21 . 09 . 1937



விண்ணில்
18 . 05 . 2025

**திருமதி சின்னாச்சிப்பிள்ளை திருச்செல்வம்**
(ஓய்வு பெற்ற ஆசிரியர் யா/கோப்பாய் சரவண பவானந்த வித்தியாலயம் மற்றும் யா/உரும்பிராய் சந்திரோதய வித்தியாலயம்)

சுதுமலை கிழக்கு மலைவேம்படி ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் தெஹிவளை, கொழும்பு, கோப்பாய் மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னாச்சிப்பிள்ளை திருச்செல்வம் அவர்கள் நேற்று முன்தினம் (18.05.2025) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பையா-வள்ளியம்மை தம்பதியின் இளைய புதல்வியும், காலஞ்சென்ற கார்த்திகேசு-செல்லம்மா தம்பதியின் ஏக மருமகளும், காலஞ்சென்ற திருச்செல்வம் (ஓய்வு பெற்ற ஆசிரியர் யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி) அவர்களின் அன்பு மனைவியும், சுமதி, சுரேஸ்குமார் (புள்ளிவிபரவியலாளர், தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்-கொழும்பு) ஆகியோரின் அன்புத் தாயாரும் இந்திரகுமாரியின் (பிரதி அதிபர், கொ/புனித அந்தோனியர் மகளிர் கல்லூரி, கொள்ளுப்பிட்டி) ஆகியோரின் அன்பு மாமியாரும், கஜானேஷின் (கொ/றோயல் கல்லூரி) பாசமிகு பேர்த்தியும் சுதுமலை கிழக்கைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான பாலசிங்கம் (ஓய்வு பெற்ற ஆசிரியர்), பூரணம் (ஓய்வு பெற்ற ஆசிரியர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.05.2025) செவ்வாய்க்கிழமை காலை 08.00 மணியளவில் கோப்பாய் மத்தியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**"குமரபதி",
கோப்பாய் மத்தி,
கோப்பாய்.**

**தகவல்: மகன்
கா.தி.சுரேஸ்குமார்.
071 803 9864
076 699 7350**

## ஆதன உரிமை மாற்ற அறிவித்தல்

**வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை
பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகம்,**
விண்ணப்பதாரரின் பெயர்: சுதர்சனுக்கும் பெண் கீர்த்தனாவிற்கும்
சபை ஆதனவரி பதிவேட்டின்படி பெயர்: M.செல்லையா
முகவரி: ஆதன இல:26,ஞானவைரவர் ஒழுங்கை, பண்டத்தரிப்பு, வட்டாரம் - 04

வட்டாரம் 04, ஞானவைரவர் ஒழுங்கை, ஆதன இல,26 இல் அமைந்துள்ள ஆதனம் பிரசித்த நொத்தாரிசு சி.சிவபாலசுப்பிரமணியம் முகதாவில் 228/27.01.2016 ஆம் இலக்க வெளிப்படுத்தல் உறுதியின் பிரகாரம் வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வலி, தென்மேற்கு பகுதி பண்டத்தரிப்பு கோவிற்பற்று பண்டத்தரிப்பு இறை "மல்லான வளவும் மறு பிரிவும்" எனும் பெயருள்ள நிலப்பரப்பு குளி பதினாறு தசம் நாலு மூன்றும் (16.43) விஸ்தீரணமுள்ள இவ் ஆதனம்,தனது தந்தையார் மார்க்கண்டு செல்லையாவினால் முதுசமாக ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தைந்தாம் (1975) ஆண்டு காலப்பகுதியில் அவர் இறக்கும் போது விட்டுச்சென்ற இதன் கீழ்க்காணும் ஆதன இடாப்பில் நன்கு விபரிக்கப்படும் ஆதனமானது அன்று முதல் இன்று வரை எனது சொந்தமும் ஆட்சியுமானது.தனது பெற்றோரால் விட்டுச் சென்ற ஆவணங்கள் கடந்த போர்ச்சூழல் காரணமாக தொலைந்துவிட்டது என்றும் கடந்த நாற்பது 40 வருடங்களுக்கு மேலாக எதுவித குறுக்கீடுமற்ற தங்குதடையற்ற வகையில் நானும் தனது பிள்ளைகளும் குடியிருந்து வருவதாகவும் செல்லையா பங்சலிங்கம் வெளிப்படுத்தியுள்ளார்.

பின்னர் குறித்த ஆதனம் செல்லையா பஞ்சலிங்கமும் பெண் உமாவும் என்பவர்களால் பிரசித்த நொத்தாரிசு சி.சிவபாலசுப்பிரமணியம் முகதாவில் 396/2016.07.18 ஆம் இலக்க சீதன உறுதிப்பிரகாரம் தமது மகள் கீர்த்தனாவிற்கும் கந்தசாமி சுதர்சன் என்பவருக்கும் ஏற்கனவே நடந்தேறிய திருமணம் காரணமாக சுதர்சனுக்கும் பெண் கீர்தனாவிற்கும் வந்தடைந்தது.

**ஆதன விபரம்**

நில அளவையாளர் A.லோகநாதன் அவர்களால் வரையப்பட்ட 1053ஆம் இலக்க 2021.06.29 ஆம் திகதிய நிலஅளவைப்படத்தின் பிரகாரம் நிலப்பரப்பு குளி 16.35கொண்ட இவ் ஆதனத்தின் எல்லைகள் பின்வருமாறு

வடக்கு - சுப்பிரமணியம் பாலசிங்கத்தின் ஆதனம்
கிழக்கு - குறித்த ஆதனத்தின் பங்குக் கிணற்றுக்குச் செல்லும் ஒழுங்கை
மேற்கு - சுப்பிரமணியம் பாலசிங்கத்தின் ஆதனம்
தெற்கு - பிரதான வீதிக்கு செல்லும் ஒழுங்கை

மேற்குறித்த ஆதனத்தை சுதர்சனுக்கும் பெண் கீர்தனாவிற்கும் என்ற பெயரில் ஆதன உரிமை மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ ஆட்சேபனையை தெரிவிக்குமாறும் ஆட்சேபனை தெரிவிக்காத பட்சத்தில் விண்ணப்பதாரரின் பெயருக்கு ஆதன உரிமை மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் இந்த ஆதன பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

செயலாளர்
வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை,
மானிப்பாய்.

# 2ம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் திருமதி பரமேஸ்வரி ஆறுமுகானந்தன்

திதி: அமரபக்க அட்டமி (20.05.2025) செவ்வாய்க்கிழமை



பிறப்பு 08.08.1951 — இறப்பு 11.06.2023

பண்புடனே எமை வளர்த்து, பாச மழை பொழிந்து!
இன்பமுடன் நாம் வாழ, எல்லாம் எமக்களித்து,
கண்மணி போல் எமைக்காத்த அன்புத் தெய்வமே!
எம்மை விட்டு நீ! பிரிந்து ஆண்டு இரண்டு ஆனதுவே
உங்கள் வழிகாட்டலே எம்மை வாழ வைக்கின்றது.
உருவாய் இருந்து வழிகாட்டிய நீங்கள்
அருவாய் இருந்தும் வழிகாட்டுங்கள்-அம்மா!
நெஞ்சிருக்கும் வரை நாம் மறவோம்.
என்றென்றும் உங்கள் நினைவுடன் வாழ்ந்திருப்போம்
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

இரண்டாவது ஆண்டு ஆத்ம சாந்திப் பிராத்தனை இன்று (20.05.2025) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும்.

"சிவகமலகம்"
சிவசக்தி கோயிலடி,
அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி.

நீங்கா நினைவுகளுடன் வாழும்
குடும்பத்தினர்.

### முதியவர்...

செபஷ்ரியன் சிங்கராஜா செபமாலை முத்து (வயது - 74) என்ற முதியவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.
மல்லாகத்தைச் சேர்ந்த அவர், உரும்பிராயில் உள்ள வீடொன்றைப் பராமரித்து வந்த நிலையில், சில நாள்களாக தனது குடும்பத்தினருடனான தொடர்பை இழந்துள்ளார்.
இதையடுத்து, அவருடைய குடும்பத்தினர் நேற்றுமுன்தினம் அவர் பராமரித்து வந்த வீட்டுக்குச்சென்று பார்த்தபோது அவர் உருக்குலைந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.
இறப்பு விசாரணைகளை வலிகாமம் கிழக்கு திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார்.
(அ-ம-26-20-27)

### நீர்வேலியில்...

தியைச் சேர்ந்த செல்வராசா அனிஸ்ரன் (வயது 29) என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.
யாழ்ப்பாணத்தில் இருந்து பருத்தித்துறை நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிளும், யாழ்ப்பாணத்தை நோக்கி வந்த இன்னொரு மோட்டார்சைக்கிளும் மோதியதிலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.
விபத்துக்கு உள்ளான இரண்டு மோட்டார்சைக்கிள்களிலும் நான்கு இளைஞர்கள் பயணித்த நிலையில் அவர்கள் அனைவரும் காயங்களுடன் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் மேற்படி இளைஞர் சிகிச்சையின்போது உயிரிழந்துள்ளார்.
இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார்.
(அ-ம-26)

### நிமோனியாவால்...

னையா ரஜீனா (வயது 54) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.
இது குறித்து மேலும் தெரியவருகையில், குறித்த பெண்ணுக்கு திடீர் சுகவீனம் ஏற்பட்ட நிலையில் தனியார் மருத்துவமனையில் சிகிச்சையளிக்கப்பட்டது. இருப்பினும் நோய் குணமடையாத நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். எனினும் மருத்துவமனைக்குச் செல்லும் வழியிலேயே அவர் உயிரிழந்து விட்டாரென மருத்துவர்கள் உறுதிப்படுத்தினர்.
அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார்.
நிமோனியா காய்ச்சல் காரணமாகவே மரணம் சம்பவித்துள்ளதாக உடற்கூற்று பரிசோதனைகளில் தெரியவந்துள்ளது.
குறித்த பெண்ணின் கணவர் கடந்த 2008 ஆம் ஆண்டு உள்நாட்டுப் போரில் எறிகணை வீச்சில் பலியானர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (அ-27-26)

### துப்பாக்கி...

களில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. தெஹிவளை - நெதிமல பகுதியில் உள்ள கடை ஒன்றில் நேற்றுக்காலை மோட்டார் சைக்கிளில் வந்த இரண்டு பேர் துப்பாக்கியால் சுட்டு விட்டு தப்பியோடியுள்ளனர். எனினும் இதன்போது அவர்களின் குறி தவறியதால் எவருக்கும் உயிர்ச்சேதம் ஏற்படவில்லை.
அதேபோன்று, கொழும்பு 13 ப்ளுமென்டல் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் ஆண் ஒருவரும், பெண் ஒருவரும் படுகாயமடைந்தனர்.
நாராஹென்பிட்ட கிங்ஸ் தனியார் மருத்துவமனைக்கு அருகில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு தேசிய லொத்தர் சபையின் முன்னாள் பணிப்பாளர் துஷித ஹல்லோலுவை குறிவைத்து இனந்தெரியாத நபர்கள் துப்பாக்கிச் சூடு நடத்தியிருந்தனர். இவ்வாறு தினமும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் இடம்பெறுவதால் கொழும்பில் உள்ள மக்களிடையே பெரும் பதற்றமும், பயப்பீதியும் ஏற்பட்டுள்ளதாகக்கூறப்படுகின்றது. (அ-இ)

### மழை...

துள்ளார்.
'மழை அனர்த்தத்தால் நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஜே/3 கிராம அலுவலர் பிரிவில் ஒரு குடும்பத்தை சேர்ந்த 4 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், ஜே/06 கிராம அலுவலர் பிரிவில் அடிப்படைக் கட்டமைப்பு ஒன்றும் சேதமடைந்துள்ளது.
கரவெட்டி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஜே/356 கிராம சேவகர் பிரிவில் ஒரு குடும்பத்தை சேர்ந்த மூவர் மழையால் பாதிக்கப்பட்டுள்ளதுடன் வீடு ஒன்றும் பகுதியளவில் சேதமடைந்துள்ளது.
அத்துடன் சாவகச்சேரிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஜே/304 கிராம சேவகர் பிரிவில் ஒரு குடும்பத்தை சேர்ந்த மூவர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் வீடு ஒன்றும் பகுதியளவில் சேதமடைந்துள்ளது. ஜே/328 கிராம சேவகர் பிரிவில் ஒரு குடும்பத்தை சேர்ந்த 4 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் வீடு ஒன்றும் பகுதியளவில் சேதமடைந்துள்ளது. மேலும் ஜே/305 கிராம சேவகர் பிரிவில் ஒரு குடும்பத்தை சேர்ந்த மூவர் மின்னல் தாக்கத்தினால் பாதிக்கப்பட்டுள்ளதுடன் வீடு ஒன்றும் பகுதியளவில் சேதமடைந்துள்ளது' என்றும் அவர் தெரிவித்தார். (அ-27)

### அசைவ...

யாழ்ப்பாணம்,மே 20
வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி கோயில் அருகே திறக்கப்பட்டுள்ள அசைவஉணவகத்தைமூடவேண்டுமென வலியுறுத்தி சைவ அமைப்புக்களின் ஏற்பாட்டில் இன்று செவ்வாய்க்கிழமை கவனவீர்ப்புப் போராட்டமொன்று முன்னெடுக்கப்படவுள்ளது.
நல்லூர் கந்தசுவாமி கோயில் முன்பாக இன்று மாலை 4.30 மணிக்கு நடைபெறவுள்ள இந்தப் போராட்டத்தில், அனைத்து சைவசமயிகளும் அணிதிரண்டுஎதிர்ப்பை பதிவு செய்யுமாறு அகில இலங்கை சைவ மகாசபை அழைப்புவிடுத்துள்ளது. இதே வேளை குறித்த கடைக்கு எதிராக கடந்த புதன்கிழமை பஜனைப் போரட்டமொன்றும் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.
(அ-20-26-125)



சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலையில் இடம்பெற்ற தென்மராட்சி வலயமட்ட செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வில் கலப்பு அணியில் பங்குபற்றிய இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயத்தின் தரம்-3 அணி முதலாம் இடத்தைப் பெற்று மாகாணமட்டப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளது. தரம் -5 அணியினர் வலயமட்டத்தில் மூன்றாவது நிலையைப் பெற்றுள்ளனர். (எ-41-159)




கிளிநொச்சி சமத்துவக்கட்சி அலுவலகத்தில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு உணர்வெழுச்சியுடன் இடம்பெற்றது. (எ-25,214)




முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தினத்தை முன்னிட்டு பிரான்ஸ், பரிஸில் இலங்கையை சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றில் முற்படுத்தக்கோரி கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. (எ-இ)

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணிக் கட்சியின் மன்னார் மாவட்ட மகளிர் அமைப்பின் ஏற்பாட்டில், முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு மன்னார் கலாசார மண்டபத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. (எ-56)










இலங்கை கடற்படையினர், திருகோணமலை சுகாதார மருத்துவ அதிகாரிகள் ஆகியோரின் ஏற்பாட்டில், தனிப்பட்ட சுகாதாரம், நோய்த் தடுப்பு மற்றும் அவசர சிகிச்சை ஆகிய துறைகளில் பாடசாலை மாணவர்களின் அறிவு மற்றும் தயார்நிலையை மேம்படுத்துவது தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு திருகோணமலை திஸ்ஸ கல்லூரியில் அண்மையில் நடைபெற்றது. (எ-25,125)

தலைமன்னார் புனித லோறன்சியார் தேவாலயத்தில் தலைமன்னார் பங்குத்தந்தை அருட்பணி. டெனி கலிஸ்டஸ் மற்றும் திருக்குடும்ப கன்னியர் சபையின் அருட்சகோதரிகள் தலைமையில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. (எ-25,56)

## அடுத்தாண்டு....

வடக்கு, கிழக்கு உட்பட 9 மாகாணங்களுக்குமான தேர்தலை அடுத்த ஆண்டு முற்பகுதியில் நடத்துவதற்கு தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் திட்டமிட்டிருந்தது. அரசாங்கத் தரப்பின் பிரமுகர்களும் இதை உறுதிப்படுத்தியிருந்தனர். அண்மையில் நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகளை அடுத்து, மாகாணசபைத் தேர்தலை நடத்தும் முடிவை அரசாங்கம் பிற்போடக்கூடும் என்ற ஊகங்கள் வெளியாகியிருந்தன. தேசிய மக்கள் சக்திக்கு உள்ளூராட்சித் தேர்தலில் வாக்குச் சரிவு ஏற்பட்டுள்ளதால், அரசாங்கம் மாகாணசபைத் தேர்தலை நடத்தாது என்று எதிர்க்கட்சிகளும் அச்சம் வெளியிட்டிருந்தன.

ஆயினும், மாகாண சபைத் தேர்தல் தொடர்பான அரசாங்கத்தின் தீர்மானத்தில் எந்த மாற்றமும் இல்லை என்று ஆளுங்கட்சிப் பிரமுகர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

“மாகாணசபைத் தேர்தலை விரைவாக நடத்தவேண்டும் என்ற அரசாங்கத்தின் திட்டம் மாறாது. விரைவில் மாகாணசபைத் தேர்தல் நடைபெறும். பெரும்பாலும் அடுத்தவருடம் மார்ச் மாதத்துக்கு முன்னதாக மாகாணசபைத்தேர் தலை நடத்திமுடிக்க வேண்டும் என்பதில் அரசாங்கம் உறுதியாக இருக்கின்றது” என்றும் அவர் தெரிவித்துள்ளார். (அ-எ-44)

## மாகாணசபைத்...

தெரிவித்துள்ளார் தமிழரசுக் கட்சியின் பதில் தலைவரும், வடக்கு மாகாண அவைத்தலைவருமான சீ.வி.கே.சிவஞானம்.

அவர் நேற்று நடத்திய ஊடக சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

'மாகாணசபைத் தேர்தல் நடைபெற்றால் தமிழரசுக் கட்சியின் சார்பில் முதலமைச்சர் வேட்பாளராக யார் களமிறக்கப்படுவார்?' என்று ஊடகவியலாளர்கள் வினவியபோது அவர் மேலும் தெரிவித்ததாவது

முதலில் மாகாணசபைத் தேர்தலைப் பற்றி இப்போது கதைப்பது பயனில்லை. ஏனென்றால் அது நடக்குமா என்ற சந்தேகம் எனக்கிருக்கிறது. மாகாணசபைத் தேர்தல் இந்த வருடம் நிச்சயம் நடைபெறாது. ஏனெனில் அதற்கான நிதியொதுக்கீடு இந்த வருட பட்ஜெட்டில் இல்லை. முதலில் மக்கள் கடந்த தேர்தலில் எவற்றை நிறைவேற்றுவதற்கு ஆணை தந்துள்ளார்களோ அதனை தேர்தலற்ற காலத்தில் நாம் நிறைவேற்ற வேண்டும். அப்போது மாகாணசபைத் தேர்தல் நடந்தால் பொருத்தமான நபரை முதலமைச்சர் வேட்பாளராக கட்சி நியமிக்கும். அதைவிடுத்து இப்போதே சிலர் கட்சியையும் மக்களையும் குழப்பும் வகையில் சமூகவலைத்தளங்களில் சிறுபிள்ளைத்தனமாக அபிப்பிராய வாக்கெடுப்பெல்லாம் நடத்துகின்றனர் - என்றார். (அ-26-20)

## சுமந்திரனே...

'நான் சுமந்திரனை செயலாளராக ஏற்றுக்கொள்ளவில்லை. இதனை மத்திய குழுவிலும் தெரிவித்துள்ளேன்' என்று தெரிவித்திருந்தார்.

இது தமிழரசுக்கட்சி மட்டத்தில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது. இந்த நிலையிலேயே குறித்த சர்ச்சை தொடர்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்து வெளியிட்ட தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சீ.வி.கே. சிவஞானம் கருத்துத் தெரிவிக்கையில்,

'இப்போது கட்சியின் மத்திய செயற்குழுவே அதிகாரம் மிக்கது. அதன்படி கட்சியில் வறிதாகும் பதவி நிலைகளுக்கு மத்திய செயற்குழு உறுப்பினர்களை நியமிக்கும்.

அதன்படியே இப்போதுள்ள பதவி நிலை நியமனங்கள் செய்யப்பட்டு செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. இதை சிறீதரன் புரிந்துகொள்ள வேண்டும்- என்றார். (அ-26,20)

## பெரும்பான்மைக்...

யாழ்ப்பாணம், மே 20

பெரும்பான்மைத் தேசியக் கட்சிகளுக்கு இடங்கொடுக்காத வகையில் தமிழ்த் தேசியத்தை நேசிக்கும் கட்சிகள் ஓரணியில் நின்று ஆட்சி அதிகாரத்தைக் கையகப்படுத்தவேண்டும் இவ்வாறு தமிழரசுக் கட்சியின் பதில் தலைவரும் வடமாகாண சபையின் அவைத்தலைவருமான சீ.வி.கே.சிவஞானம் தெரிவித்துள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

உள்ளூராட்சி மன்றங்களின் ஆட்சி அமைப்புத் தொடர்பில் பல கட்சிகளுடன் பேசியிருக்கின்றோம். அதற்கு பெரும்பான்மைத் தேசியக் கட்சிகளுக்கு இடங்கொடுக்காத வகையில் தமிழ்த் தேசியத்தை நேசிக்கும் கட்சிகள் ஓரணியில் நின்று ஆட்சி அதிகாரத்தைக் கையகப்படுத்தும் பணிக்குப் பங்களிக்கவேண்டும் என்றும் அழைப்பு விடுகின்றேன்.

இது தொடர்பில் தமிழ்த் தரப்பிலுள்ள ஏனைய கட்சிகளுடனும் பேசியுள்ளேன். குறிப்பாக ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி, ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி உள்ளிட்ட ஏனைய தரப்பினரது ஆதரவும் இதற்குக் கிடைக்கும் என்று நம்புகின்றேன். தமிழ் மக்களுக்காக தமிழ்க் கட்சிகள் ஒற்றுமைப்படுகிற முயற்சிகளை தமிழரசுக் கட்சி ஒருபோதும் குழப்பவில்லை. அவ்வாறு ஒன்றுபடுகிற முயற்சியை தமிழரசுக் கட்சியே [illegible]ப்புவதாக தமிழ்த் தேசிய மக்கள் [illegible]ணணி கூறுவது முற்றிலும் தவறு. அதற்கான நேரகாலம் வருகிறபோது [illegible]டாகப் பேசுவதற்குத் தயார்-என் (அ-26-20)

## ...ல்நீரை...

[illegible]ல்நீரை சுத்திகரித்து தாளையடியின் [illegible]தொனியில் உள்ள தண்ணீர்த் தாங்[illegible] அனுப்பி அங்கிருந்து கரவெட்டி [illegible]தேசத்தில் வசிக்கும் மக்களுக்கு [illegible] மூலம் தண்ணீர் வழங்குவதே [illegible]த் திட்டமாகும். 'மைத்திரி - ரணில் [illegible]ட்சி' காலத்தில் இந்தத் திட்டம் [illegible]ம்பிக்கப்பட்டிருந்தது. இதைத் [illegible]டர்ந்து கட்டம் கட்டமாக அடுத்தகட்ட [illegible]வடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட [illegible]லயில், நேற்று அந்தத் திட்டம் பரீட்[illegible]த்த முயற்சிகளுக்கு உட்பட்டுள்[illegible]. இந்தத் திட்டத்தின் கீழ் 3 லட்சம் [illegible]களுக்கு பாதுகாப்பான குடிதண்ணீர் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-100,26)

## தேவைகருதிய...

'வடமாகாண சபையில் கடமையாற்றும் இலங்கை நிர்வாக சேவை உத்தியோகத்தர்களின் இடமாற்றம் தொடர்பான ஊடக செய்தி தொடர்பில் உத்தியோகத்தர்களுக்கு ஏற்பட்ட அசௌகரியத்தை நீக்குதல்' என்ற தலைப்பின் கீழ் அனுப்பி வைக்கப்பட்டுள்ள அந்தக் கடிதத்தில் உள்ளதாவது:

கடந்த 14ஆம் திகதி வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் கீழ் கடமையாற்றிய எமது சங்கத்தை சார்ந்த (மூவரின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன) இலங்கை நிர்வாக சேவை உத்தியோகத்தர்களுக்கு வடமாகாண ஆளுநரின் வழிப்படுத்தலுக்கமைய, சேவையின் தேவை கருதிய இடமாற்றமானது வடமாகாண பிரதிப்பிரதம செயலாளரால் வழங்கப்பட்டது.

இந்த நிலையில் கடந்த 16ஆம் திகதிய உதயன் பத்திரிகையில், பொதுமக்களால் தொடர்ச்சியாக வழங்கப்பட்ட பல்வேறு முறைப்பாடுகளுக்கு அமைய இவர்களின் பதவிகள் ஆளுநரால் பறிக்கப்பட்டதாகவும், உடன் செயற்படும் வகையில் வேறு திணைக்களங்களுக்கு மாற்றப்பட்டிருப்பதாகவும், அவர்களில் சிலருக்கு எதிராக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகவும் செய்தி பிரசுரிக்கப்பட்டிருந்தது.

மேலும் முச்சந்தி முரளி பகுதியில் 'இப்பிடி பதவியைப் பறிச்சாத்தான் மற்றவையும் பிழை செய்யப் பயப்படுவினம் கண்டியளோ' என குறிப்பிடப்பட்டிருந்தது.

இவ்வாறாக உண்மைக்கு மாறாக குறித்த ஊடகத்தில் செய்தி வெளியிடப்பட்டமை அவர்களின் பெயருக்கு களங்கத்தை ஏற்படுத்தியுள்ளதுடன், அவர்களிற்கு மிகுந்த மன வருத்தத்தை அளித்துள்ளதாக அவர்களால் எமக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நடைமுறைகளுக்கு எதிராக எந்த சேவைத்தரத்தை சேர்ந்தவர்களாயினும் தாபன விதிக்கோவையின் செயற்படின் தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளுக்கமைய, ஒழுக்காற்று நடைமுறைகளுக்கமைய நடவடிக்கை எடுப்பதற்கு எமது சங்கம் எப்போதும் ஒத்துழைப்பு வழங்கும். ஆனால் தேவைகருதிய இடமாற்றம் என பிரதிப் பிரதம செயலாளரினால் இடமாற்றக் கட்டளை வழங்கப்பட்ட நிலையில், பத்திரிகையில் அதற்கு முரணான முறையில் செய்தி வெளியாகியமை எமக்கு மனவருத்தத்தினை அளிக்கின்றது. எனவே தங்களினாலோ அல்லது பிரதம செயலாளராலோ உண்மை நிலையினை தெரியப்படுத்தினால் பாதிக்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு ஏற்பட்ட அபகீர்த்தியினை குறைக்கமுடியும் என நம்புகின்றோம்.

மேலும் இந்த இடமாற்றப்பட்டியலில், இலங்கை நிர்வாக சேவை உத்தியோகத்தர்களின் முதுநிலையானது கவனத்தில் கொள்ளப்படாது, தரம் II இலுள்ள மற்றும் தரம் 11 இற்கு தகுதி பெற்ற மூன்று உத்தியோகத்தர்கள் நகர சபையின் செயலாளர்களாக கடமையாற்றிக் கொண்டுள்ளபோது, இலங்கை நிர்வாக சேவை தரம் III உத்தியோகத்தர் ஒருவர், அவர்களின் மேலதிகாரியாக யாழ்ப்பாண உள்ளூராட்சி உதவி ஆணையாளராக இடமாற்றம் வழங்கப்பட்டிருப்பது நிர்வாக நடைமுறைக்கு சிக்கலைத் தோற்றுவிக்கும் என்பதுடன், எமது இலங்கை நிர்வாக சேவையின் கட்டமைப்பினையும் சீர்குலைப்பதாகவும் உள்ளது என்பதனையும் தங்களது கவனத்துக்குக் கொண்டுவருகின்றோம்.

அத்துடன் இந்த இடமாற்றமானது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2426/06 ஆம் இலக்க 2025ஆம் ஆண்டு மார்ச் மாதம் 3ஆம் திகதிய தேர்தல் ஆணைக்குழுவின் அதிவிசேஷ வர்த்தமானப் பத்திரிகையின் 3.3.4 ஏற்பாட்டினை மீறுவதாக உள்ளது என்பதனையும் தங்களுக்கு அறியத்தருகின்றேன். எனவே மேற்கூறிய விடயங்கள் தொடர்பாக ஆளுநரின் கவனத்திற்கு கொண்டுசென்று உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தங்களைக் கேட்டுக்கொள்கின்றேன் -என்றுள்ளது.

**ஆசிரியர் குறிப்பு:**

1. *ஆளுநரால் 22 அதிகாரிகளுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டபோதும், அவர்களில் 7 பேர் மட்டுமே லஞ்சம், மோசடி மற்றும் பாலியல் குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் உடனடியாக பதவி பறிக்கப்பட்டு, இடமாற்றம் செய்யப்பட்டிருந்தனர். எனவேதான் 22 பேருக்கு இடமாற்றம் என்ற விடயத்தை விடுத்து, உதயனில் பிரசுரமான குறித்த செய்தியில் 'உயரதிகாரிகள் ஏழுபேரின் பதவிகள் பறிக்கப்பட்டன' என்று தெளிவாக வெளிப்படுத்தப்பட்டது. இந்தச் செய்தி தகுந்த ஆதாரங்களின் அடிப்படையிலேயே பிரசுரமானது.*
2. *தேவை கருதிய இடமாற்றத்தை உதயன் 'பதவி பறிப்பு' எனப் பிரசுரித்து குறித்த உத்தியோகத்தர்களுக்கு களங்கம் ஏற்படுத்திவிட்டதென்பதே இந்தச் சங்கத்தின் பிரதான குற்றச்சாட்டு. இந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மூன்று நிர்வாக சேவை உத்தியோகத்தர்கள் மட்டுமல்லாது இன்னும் நான்கு உத்தியோகர்கள் அடங்கலாக மொத்தம் 7 அதிகாரிகள் மீதும் விசாரணை நடத்துவதற்காகவும், அவர்கள் விசாரணைக்கன சாட்சிகளைக் குழப்பக்கூடாது என்பதற்காகவும் இடமாற்றம் வழங்குவதே தாபன விதிக்கோவையின் படியான ஆரம்பகட்ட நடவடிக்கை ஆகும். ஆனால், அவ்வாறு செய்வதால் நிர்வாக குழப்பங்கள் ஏற்படும். எனவே, சமச்சீரான மற்றும் சுமூகமான நிர்வாகத்தை உறுதிப்படுத்துவதற்காக அவர்கள் வகித்த அதிகாரம் மிக்க பதவி பறிக்கப்பட்டு, வேறு திணைக்களங்களில் உள்ள வேறு பதவிகளுக்கு மாற்றப்பட்டுள்ளனர். எனவே இது தண்டனை கருதிய இடமாற்றமே அன்றி தேவை கருதிய இடமாற்றம் அல்ல.*
3. *குறித்த கடிதத்திலேயே இடமாற்றம் செய்யப்பட்ட தரம்2 ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களின் இடத்துக்கு தரம் 3 ஐச் சேர்ந்த அதிகாரி நியமிக்கப்பட்டிருக்கிறார் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அதனூடாகவும் இதுவொரு தேவைகருதிய இடமாற்றம் அல்ல, விசாரணை கருதிய உடனடி இடமாற்றம் என்பதை குறித்த சங்கமே மறைமுகமாக 'பொல்லைக் கொடுத்து' அடிவாங்கியுள்ளது.*
4. *குறித்த 7 அதிகாரிகள் தொடர்பிலும் பொதுமக்கள் உதயனுக்கும் பல முறை முறைப்பாடுகளை வழங்கியிருந்தார்கள். ஆயினும் அவை குறித்த நம்பகத்தன்மையை ஆராயும் பொருட்டு குறித்த முறைப்பாடுகளை உதயன் பிரசுரிக்காமல் தவிர்த்து வந்தது. அந்த முறைப்பாடுகள் தொடர்பில் ஆராய்ந்து, குறித்த உத்தியோகத்தர்கள் செய்த அத்தனை திருகுதாளங்களும் அவர்களின் பெயர் விவரங்கள் மற்றும் ஆதாரங்களோடு உதயனில் வெகுவிரைவில் பிரசுரமாகும். (அ)*

# காணி சுவீகரிப்பு வர்த்தமானி: இடைநிறுத்தியது அரசாங்கம்

**கொழும்பு, மே 20**

**காணிகளைச் சுவீகரிப்பது தொடர்பில் மார்ச் மாதம் 28ஆம் திகதியன்று வெளியான வர்த்தமானி அறிவித்தலை, தற்காலிகமாக இடைநிறுத்தி வைப்பதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.**

இந்த வர்த்தமானி அறிவித்தல் மூலம், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களில் காணிகளைச் சுவீகரிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுப்பதாகக் குற்றஞ்சாட்டப்பட்டி ருந்தது. இந்த விடயம் தொடர்பில் தமிழர் பகுதியில் போராட்டங்களை முன்னெடுக்க வும் தீர்மானிக்கப்பட்டிருந்த நிலையிலே யே, 'வர்த்தமானி அறிவித்தலின் மூலம் சமூகத்தில் எழுந்துள்ள தவறான கருத்துக்கள் மற்றும் தவறான புரிதல்கள் நீங்கும் வரை, அடுத்தக்கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வது தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது' என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

இது தொடர்பில் கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் ஊடகப் பிரிவு அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:

மார்ச் மாதம் 28ஆம் திகதியன்று பிரசுரிக்கப்பட்ட வர்த்தமானி அறிவித்தல், எந்த வகையிலும் காணிகளை அரசுடமையாக்கும் அல்லது கையகப்படுத்தும் நடவடிக்கையல்ல.

நிலத்தின் உரிமையாளர் எவரேனும் வெளிநாட்டில் வசித்தால் அவர் முறையாக அங்கீகரிக்கப்பட்ட சட்டத்தரணி மூலமாகவும் தனது கோரிக்கையைச் சமர்ப்பிக்கலாம். உரிமை கோரல்களைச் சமர்ப்பிப்பதற்குச் சட்டம் மூன்று மாத காலவகாசம் வழங்கினாலும், இறுதி தீர்வு உத்தரவு வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்படும் வரை சமர்ப்பிக்கப்பட்ட உரிமைக்கோரல்களை ஏற்றுக்கொள்ளலாம் என்ற சிறப்பு ஏற்பாடு உள்ளது. இது நில உரிமையாளர்கள் தங்களின் கோரிக்கைகளை முன்வைக்க ஒரு வாய்ப்பை மேலும் வழங்கியுள்ளது.

நில உரிமையாளர் உரிமைக் கோரலை தாக்கல் செய்யும்போது, அந்த காணி தொடர்பான ஆவணங்கள் மூலமாக மாத்திரம் உரிமைக் கோரலை சமர்ப்பிக்க வேண்டிய அவசியமில்லை. மேலும் உரிமை கோரல் விசாரணையின் போது, நிலத்தின் உடைமை அதனை அனுபவித்தல் மற்றும் நிலத்தினை அபிவிருத்தி செய்திருத்தல் போன்ற அம்சங்களும் கவனத்திற் கொள்ளப்படுவதால், அப்போதைய போர் சூழ்நிலை காரணமாக நிலம் தொடர்பான ஆவணங்கள் அழிக்கப்பட்ட அல்லது காணாமல் போன நில உரிமையாளர்கள் தங்கள் நிலங்களுக்கான உரிமைகளைத் தீர்த்துக் கொள்ள இது ஒரு வாய்ப்பை வழங்கியுள்ளது. இந்த செயன்முறையின் மூலம் குறித்த வரைபடப் பகுதிக்குள் உள்ள காணிகளின் உரிமை தனியாருக்குச் சொந்தமானதா அல்லது அரசுக்கு சொந்தமானதா என்பதைத் தனித்தனியாக அடையாளம் காண முடியும். தனிப்பட்ட காணி உரிமையாளருக்கு அரசாங்கம் அவர்களின் காணியின் தெளிவான உரிமையை இதன்மூலம் உறுதிப்படுத்திக்கொடுக்கவாய்ப்புகிடைக்கின்றனது. நீண்டகாலமாக நிலவி வருகின்ற காணிப் பிரச்சினைகளை இதன்மூலம் முறையாக தீர்த்துக் கொள்ள முடியும். அரசுக்குச் சொந்தமான நிலங்களைத் தனித்தனியாக அடையாளம் காண முடிவதன் மூலம், முதலீட்டு வாய்ப்புகளுக்கான அணுகலை வழங்குவதோடு, காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டம் மற்றும் அரச காணிக் கட்டளைச் சட்டத்தின்படி நிலமற்ற மக்களுக்கு அரசுக்குச் சொந்தமான காணிகளை வழங்குவதற்கும் வாய்ப்பு கிடைக்கிறது.

வடக்கு மாகாணத்தில் 30 சதவீதம், கிழக்கு மாகாணத்தில் 81 சதவீதம், வடமத்திய மாகாணத்தில் 99 சதவீதம், வடமேல் மாகாணத்தில் 99 சதவீதம், சப்ரகமுவ மாகாணத்தில் 99 சதவீதம், மத்திய மாகாணத்தில் 99 சதவீதம், மேல் மாகாணத்தில் 100 சதவீதம், தென் மாகாணத்தில் 100 சதவீதம், ஊவா மாகாணத்தில் 99 சதவீதம் என்ற அடிப்படையில் காணி நிர்ணயப் பணிகள் நிறைவடைந்துள்ளன - என்றுள்ளது. (ம-இ)

## முறைசாராப் பயிற்சிநெறிக்கு விண்ணப்பங்கோரல்

**யாழ்ப்பாணம், மே 20**

தென்மராட்சிக் கல்வி வலயத்தின் முறைசாராக் கல்விப் பிரிவில் மணப்பெண் அலங்காரம், உடை அமைத்தல், மின்னிணைப்பு போன்ற பயிற்சி நெறிகளுக்கான போதனாசிரியர்கள், பயிலுநர்கள் ஆகியோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இணைய விரும்புவோர் வலய முறைசாராக் கல்விப் பிரிவு அல்லது வலயக்கல்வி அபிவிருத்திப் பிரிவு ஆகியவற்றில் எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-33)



## சூடானுக்குப் புதிய பிரதமர்

சூடானின் இராணுவத் தலைவர் அப்தெல் பத்தா புர்ஹான், ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் அதிகாரியான கமில் இட்ரிஸை சூடானின் புதிய பிரதமராக நியமித்துள்ளார். (ம)

**தேவை**

யாழ் நகரில் இயங்கும் தனியார் கல்வி நிறுவனமொன்றிற்கு அலுவலக உதவியாளர் (clerk) - பெண்கள் இருவர் உடன் தேவை. (யாழ் மாநகர சபைக்குள் வசிப்பவர்கள் மட்டும்)

தொடர்பு: 077 459 8440

**விற்பனைக்கு**

வியாபார நிலையத்திற்கு உகந்த அலுமினிய கண்ணாடி றாக்கை மற்றும் கண்ணாடி சோக்கேஸ்கள் விற்பனைக்கு உண்டு.

T.P - 077 711 1025
076 779 9262 , 077 991 1025

**வீடு வாடகைக்கு உண்டு**

யாழ்ப்பாணம் பிரதான வீதியில் 4 ஆம் குறுக்குத்தெருவிற்கும் 6 ஆம் குறுக்குத்தெருவிற்கும் இடைப்பட்ட தூரத்தில் இரண்டு அறைகள், சமையலறை, வரவேற்பறையுடன் வீடு வாடகைக்கு உண்டு.

பார்வையிடும் நேரம் மாலை 4.30 இற்கு பின்னர்.

தொடர்பு: 077 900 4515

**HOLY CROSS SCHOOL OF HEALTH SCIENCE**

**தாதிய பயிற்சி நெறிக்கான விண்ணப்பம் கோரல்**

**ஆரம்பம் : 20.05.2025**

**விண்ணப்ப முடிவுத்திகதி : 10.07.2025**

**தகைமைகள் :**

க.பொ.த சாதாரண தரம் மற்றும் க.பொ.த உயர்தரத்தில் சித்தி அடைந்தவர்கள்.

**767/4, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம்** எனும் முகவரிக்கு நேரில் வந்து சமூகமளிக்கவும்

**அல்லது**

கீழுள்ள தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்பு கொள்ளவும்

**075 668 1918, 021 222 2424**

(CS 58312) E-1

# வடக்கிலும் தெற்கிலும் மீண்டும் இனவாதம்!

## ஜனாதிபதி அநுர சுட்டிக்காட்டு

வடக்கிலும், தெற்கிலும் அதிகாரத்துக்காக மீண்டும் இனவாதம் தலைதூக்க ஆரம்பித்துள்ளது. நாட்டில் சமாதானம் மலர்ந்தால் மட்டுமே போர் வெற்றி என்பது முழுமைபெறும். எனவே, சமாதானம் மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படும் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

தேசிய போர் வீரர் நினைவு தின நிகழ்வில் நேற்று உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

'எமது நாட்டில் மீண்டும் போர் ஏற்படாமல் இருப்பதை உறுதிப்படுத்த வேண்டியது எம் அனைவரினதும் பொறுப்பாகும். போர் இல்லாத, மோதல்கள் ஏற்படாத மற்றும் அனைவரும் சமத்துவத்துடனும், சகோதரத்துவத்துடனும் வாழக்கூடிய நாட்டையே நாம் அடுத்த தலைமுறைக்கு வழங்க வேண்டும். இதுவே போர் வீரர்களுக்கு நாம் செலுத்தும் உண்மையான கௌரவமாகும்.

எனினும், அதிகாரத்தைப் பெறுவதற்கும், தக்கவைத்துக் கொள்வதற்கும் போர், மோதல், இனவாதம் என்பன எமது நாட்டில் பயன்படுத்தப்பட்டுள்ளன. போர் என்பது தாமாகவே ஏற்பட்டதொன்றல்ல. அதிகாரத்துக்காகவே அது உருவாக்கப்பட்டுள்ளது. இதனால் வடக்கிலும், தெற்கிலும் எமது பிள்ளைகளே பாதிக்கப்பட்டுள்ளனர். மக்களால் நிராகரிக்கப்பட்ட குழுக்கள் போரை ஆசிர்வாதமாக பயன்படுத்த முற்படுகின்றன. போர் என்பது ஆசிர்வாதம் அல்ல. அது பேரவலம். சமாதானம் என்பதே தற்போது தேவைப்படுகின்றது. அதற்காகவே எமது குரல்கள் ஒலிக்க வேண்டும். எனினும், நல்லிணக்கம் மற்றும் சமாதானம் என்பவற்றை காட்டிக்கொடுப்பு அடையாளமாக காண்பிப்பதற்கு முற்படுகின்றனர்.

போர் என்பது அழிவையே தேடித்தரும். நாம் சமாதானத்துக்காகவே பாடுபட வேண்டும். எனினும், சிறிய குழுவொன்று படையினர் வசம் உள்ள துப்பாக்கிகள் செயற்பட வேண்டும் என்பதை விரும்புகின்றன. அவ்வாறு நடக்கக்கூடாது என நாம் பிரார்த்திக்கின்றோம்.

நாம் இனி இல்லை என்றளவுக்கு இரத்தம் சிந்தியுள்ளோம். கங்கைகள் நிறையும் அளவுக்கு கண்ணீர் சிந்தியுள்ளோம். போரால் பல வலிகளை அனுபவித்துவிட்டோம். போர் முடிவின் அடுத்த கட்டமென்பது அமைதியை உருவாக்குவது. அமைதியை ஏற்படுத்தினால் மட்டுமே முழுமையான வெற்றி உறுதியாகும்.

சமாதானம் மற்றும் நல்லிணக்கத்துக்காக முன்னெடுக்க வேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் நாம் முன்னெடுப்போம். சமாதானத்தை ஏற்படுத்தும் தரப்பினராக படையினர் இருக்க வேண்டும். வடக்கிலும், தெற்கிலும் அதிகாரத்துக்காக இனவாதம் மீண்டும் தலைதூக்க ஆரம்பித்துள்ளன. அதிகாரத்துக்காகவே இதனை செய்கின்றனர்' - என்றார். (ம-44)



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 20.05.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.